# நிதி நிலை அறிக்கை

# 2000 - 2001

முதலமைச்சர்

## திரு. மு. கருணாநிதி

அவர்கள் ஆற்றிய உரை

*பங்குனி 11, திருவள்ளுவர் ஆண்டு 2031*
*2000 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள்*

# தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.கருணாநிதி அவர்கள் 2000–2001 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 2000 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 நாளன்று ஆற்றும் உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உரிய கருவி

உற்ற காலம்

ஆற்றும் வகை

ஆற்றிடும் பணி

ஆகியவற்றை ஆய்ந்தறிந்து செயல்படுவதே சிறந்த அமைச்சு என இலக்கணம் வகுத்து,

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்

அருவினையும் மாண்டது அமைச்சு"

என்று அய்யன் திருவள்ளுவர் சுட்டிக்காட்டும் குறளுக்கேற்ப ஆட்சி நடத்தும் எமக்கு,

மத்திய அரசில் குவிந்திருக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநிலங்களில் சுயாட்சி மலர வேண்டுமென்பதிலும், மத்திய ஆட்சிமொழிகளாக அனைத்து தேசிய மொழிகளும் இடம் பெறும் வண்ணம் முதற்கட்டமாக தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி கிடைத்திட வேண்டுமென்பதிலும், திராவிடப் பேரியக்கத்தின் சமூக நீதிக் கொள்கைக்கேற்ப இட ஒதுக்கீட்டை அந்தந்த மாநிலங்களே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றிட வேண்டுமென்பதிலும், ஏழையெளிய நடுத்தர மக்கள், தாழ்த்தப்பட்டோர், மிகவும்

பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் முற்போக்கு வழியில் குறுக்கிடும் தடைகளை உடைத்தெறிந்து முன்னேற வேண்டுமென்பதிலும், சிறுபான்மைச் சமுதாயத்து மக்களின் பாதுகாப்பையும் மத நல்லிணக்கம், மனித நேயம் இணைந்த சமூக ஒற்றுமையைப் பேணிக் காத்திட வேண்டுமென்பதிலும், யாராலும் எந்தக் காலத்திலும் அசைக்க முடியாத உறுதியுண்டு என்னும் கொள்கை முழக்கம் செய்திடும் இந்த அரசின் சார்பில் இந்த நிதிநிலை அறிக்கையை இந்த அவையின் முன்னும் அருமைத் தமிழக மக்களின் காலடிகளிலும் வைத்திடும் இந்த நேரத்தில்;

தமிழ்நாட்டு மக்கள் வழங்கிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டளையினையொட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதும், 17.6.1967 அன்று இதே மாமன்றத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் வரவுசெலவுத் திட்டத்தை அளித்து உரையாற்றியபோது,

"சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டியதன் அவசியத்தை நாம் மறந்து விடலாகாது. `பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறள் நெறியினின்றும் வழுவி, மரபழித்துக் கொண்டு, பிளவுபட்டுக் கிடக்கும் தமிழக மக்களிடம் கப்பிக் கொண்டிருக்கும் சாதிப்பிடிப்பு நீக்கப்பட்டு, சமூக ஒருமைப்பாடு ஏற்பட்டாக வேண்டும் என்ற கொள்கையிலே இந்த அரசு பற்று மிகக் கொண்டிருக்கிறது என்பதனை அனைவரும் அறிவர். இன்றைய பேதமும், பிளவும் நீங்கி `எல்லோரும் ஓர் குலம் – ஓர் நிறை' என்ற குறிக்கோள் வெற்றி பெற வேண்டும்.

நாங்கள் சமூக நீதியின் அடிப்படையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர்கள்; சேமிப்பு, சிக்கனம் ஆகிய நற்பண்புகளை என்றுமே வலியுறுத்தி வந்திருக்கும் தமிழகத்தின் பழம்பெரும் பண்பாட்டின் வழி வந்தவர்கள்"

—என்று முழக்கமிட்டது இன்றும் எனது சிந்தை அணு ஒவ்வொன்றிலும் செம்புலப் பெயல்நீர் போல் கலந்திருக்கிறது.

அதே நம்பிக்கையுடனும், அதே குறிக்கோளுடனும் – `என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று, தந்தை பெரியார் தந்த பார்வை, அண்ணா வகுத்தளித்த பாதை இவற்றைப் போற்றி, இம்மியளவும் வழுவிடாமல் – தமிழுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் தொண்டூழியம் செய்து வருகின்றேன்.

வன்முறை தவிர்த்து வறுமையை வென்றிடவும், ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்திடவும், உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்திட என்றைக்கும் நான் சித்தமாய் இருக்கின்றேன் என்ற உறுதியினை இந்த மாமன்றத்தின் மூலம் என்னரும் தமிழ்நாட்டினர்க்கு வழங்கி, **1999–2000** ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், **2000–2001** ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு மதிப்பீடுகளையும் இந்த அவை முன் படைக்கிறேன்.

## *பொருளாதார வளர்ச்சி*

**2.** நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி வளர்ச்சி (Gross State Domestic Product) **6.6** விழுக்காடாக இருக்கும். 'ஆட்டோமொபைல்' போன்ற முக்கிய தொழில்களில் தேக்க நிலை அகன்று உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால் தொழில் துறையின் (manufacturing sector) வளர்ச்சி, **13** விழுக்காடாக இருக்கும்.

**3.** வரும் நிதியாண்டில் தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட சாலைகள், ஊரகச் சாலைகள், நகர்ப்புறங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள தெருக்களை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான மொத்த முதலீடு ரூ.**1685** கோடியாக இருக்கும். தொலைத் தொடர்பு துறையில் மொத்த முதலீடு ரூ.**2285** கோடி ஆகவும், குடிநீர் வழங்கல், துப்புரவுப் பணி ஆகியவை உள்ளிட்ட நகர்ப்புற

கட்டமைப்பு வசதித் திட்டங்களில் முதலீடு ரூ.1407 கோடியாகவும், மின் உற்பத்தித் துறையில் தமிழ்நாடு மின் வாரியத்தின் முதலீடு ரூ.1034 கோடியாகவும் இருக்கும். இத்துடன், மாநிலத்தின் மின் உற்பத்தியில் தனியார் துறையினர் ரூ.1332 கோடி அளவுக்கு முதலீடு செய்வார்கள். வரும் நிதி ஆண்டில் சென்னை, எண்ணூர், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் ரூ.482 கோடி முதலீடு மத்திய அரசினால் செய்யப்படும்.

## *மத்திய மாநில நிதி உறவுகள்*

4. மத்திய அரசின் வரி வருவாயிலிருந்து 29 விழுக்காட்டினை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கும்போது, மொத்த வரி வருவாயை அடிப்படையாகக் கொள்வதற்குப் பதிலாக நிகர வரி வருவாய் அடிப்படையாகக் கொள்ளப்படும் என்று மத்திய அரசு அண்மையில் குறிப்பிட்டதை மறு ஆய்வு செய்யுமாறு நான் பிரதமரையும், மத்திய நிதியமைச்சரையும் கேட்டுக் கொண்டேன். அப்போது அவர்கள் நிகர வருவாய் அடிப்படையில் கணக்கிடுகையில் மாநிலங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்திட இந்தப் பகிர்வின் விழுக்காட்டினை தக்கவாறு உயர்த்தி அளிப்பதாக உறுதி அளித்துள்ளார்கள்.

5. தமிழ்நாடு போன்று வேகமாக முன்னேறி வரும் மாநிலங்கள் பொருளாதார வளர்ச்சிக்கும், வறுமை ஒழிப்புக்குமான பல்வேறு திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றன. இந்த மாநிலங்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீட்டைக் குறைப்பதற்குப் பதில், கூடுதல் நிதியாதாரங்களை அளித்திட வேண்டுமென்று நாம் பதினோராம் நிதிக்குழுவிடமும், மத்திய திட்டக் குழுவிடமும் வலியுறுத்தியுள்ளோம்.

## *உள்ளாட்சி அமைப்புகள்*

6. மாநில அரசின் வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு நடப்பு நிதியாண்டில் ரூ.845 கோடி வழங்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டில் இத்தொகை ரூ.1036 கோடியாக உயர்த்தப்படும். இதுதவிர, கேளிக்கை வரியில் 90 விழுக்காடு பங்காக

ரூ.78 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். மாநில அரசின் பல்வேறு மானியங்கள், வரி வருவாய்ப் பங்கீடு மற்றும் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஆகிய வகையில் உள்ளாட்சி மன்றங்களுக்கு, வரும் நிதியாண்டில் மொத்தம் ரூ.2401 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. ஊரக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட ஆண்டுத் திட்டத்தையும், ஐந்து ஆண்டுத் திட்டத்தையும் அடுத்த ஆண்டு முதல் தயாரித்து வழங்கிடும் வகையில் மாவட்ட திட்டக் குழுக்கள் செயல்முறைக்குக் கொண்டு வரப்படும். **மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இயங்கி வந்த இத்திட்டக் குழுக்கள், இனி மாவட்ட ஊராட்சித் தலைவர் தலைமையில் செயல்படும்.** இக்குழுக்கள் இயங்குவதற்காக வரும் நிதி ஆண்டில் ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## *ஊரக வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு*

8. கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டம், கிராம சுய வேலை வாய்ப்பு பொன்விழாத் திட்டம் போன்ற திட்டங்களுக்காக மாநில அரசு ரூ.73 கோடியும் மத்திய அரசு ரூ.219 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளன. இதன் மூலம் 3 இலட்சத்திற்கு மேற்பட்ட ஏழைக் குடும்பங்கள் பயன் பெறும்.

9. நடப்பு நிதியாண்டிலும் வரும் நிதியாண்டிலுமாக 11,600 கி.மீ. கிராமச்சாலைகளை தார்சாலைகளாக்கவும், 5,000 கி.மீ. தெருக்களை சிமெண்ட் வீதிகளாக்கவும் சுமார் ரூ. 900 கோடி செலவிடப்படும். நடப்பு நிதியாண்டில் 3,600 கி.மீ. தார்சாலை அமைக்கும் பணியும், 2,800 கி.மீ. சிமெண்ட் வீதிகள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள பணி வரும் நிதியாண்டில் நிறைவு பெறும்.

**10. பொது மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள உழவர் சந்தைகளில் தாங்கள் விளைவித்த காய்கறிகளை உழவர்கள் நேரடியாக நியாயவிலையில் விற்பதைப் போல, கிராமப்புற மக்கள் தாங்கள் தயாரித்த கைவினைப் பொருட்களை நகர்ப்புறங்களில் விற்பனை**

செய்து உரிய விலை பெறுவதற்கான நிலையான மையங்களை அமைத்துத் தர இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகைய விற்பனை மையங்களை எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்தவும், கிராமப்புறப் பொருட்களுக்கு "பூமாலை" என்னும் வணிகச்சின்னம் உருவாக்கி, அவற்றின் விற்பனையை அதிகரிக்கவும் ரூ.14.60 கோடி வரும் நிதியாண்டில் செலவிடப்படும்.

11. அண்மையில் மத்திய அரசு பூகோள குறியீடுகள் (Geographic Indications) சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. அதாவது, ஒவ்வொரு வட்டாரமும் ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு தனிச் சிறப்பு மிகுந்த உற்பத்தி இடமாக விளங்குகிறது. உதாரணமாக காஞ்சிபுரம் பட்டு, மதுரை சுங்கடிச் சேலை, சுவாமிமலை வெண்கலச் சிலை, நாச்சியார்கோவில் விளக்கு, தஞ்சாவூர் தட்டு, பவானி ஜமக்காளம், பத்தமடை பாய் போன்றவை உலகப் புகழ் பெற்றவை. இந்தப் பெயரில் இவற்றை இந்தியாவில் மட்டுமல்ல; உலகிலேயே வேறு யாரும் தயாரிக்கக் கூடாது என்று உலக வர்த்தக நிறுவனம் (World Trade Organisation) வற்புறுத்துகிறது. இப்போது மின்னணு மூலமாக வணிகம் (e–Commerce) வந்து விட்ட காரணத்தால் இவைகளுக்கு உலக மார்க்கெட் கிடைக்க முயற்சி மேற்கொள்வதோடு, அதற்கு, தர நிர்ணயம் கொண்ட வணிகச் சின்னம் (brand name) உருவாக்கிட வழி வகை காணப்படும்.

12. கடந்த மூன்று ஆண்டுகளில் 634 கிராம ஊராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.518 கோடி மதிப்பில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கிராமப்புற வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியுள்ளோம். வரும் நிதியாண்டில் 210 கிராமங்களில் இதனை ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல்படுத்திட ரூ.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

13. நமக்கு நாமே திட்டம் மக்களிடையே பெற்றுள்ள நல்ல வரவேற்பின் அடிப்படையில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு வரும் நிதியாண்டில் ரூ.30 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.. இத்திட்டத்தில் பொதுமக்களுடைய பங்கேற்பு அதிகரிக்கும்போது, அதற்கேற்ப கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

14. பல்வேறு கிராமங்களில் பிறந்தோர், தமிழ்நாட்டிலும், இந்தியாவில் பிற மாநிலங்களிலும், பிற நாடுகளிலும் (Non-resident Indian) சீரோடும் சிறப்போடும் வாழ்கின்றனர். ஒவ்வொருவருக்கும் சொந்த ஊரின் மீது தனிப் பற்று உண்டு. எனவே அவர்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் கல்விக் கூடங்கள், மருத்துவ மனைகள் அமைக்க நிதி உதவி அளித்தால் அவர்கள் பெயரோ அல்லது அவர்களது பெற்றோர், உறவினர் பெயரோ சூட்டப்படும்.

15. ஆதிதிராவிட மக்களுக்காகவும் மற்றும் ஏழை எளிய மக்களுக்காகவும் இந்த அரசு தொடங்கிய இலவச கான்கிரீட் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டத்தின் கீழ், சென்ற நான்கு ஆண்டுகளில் 2 இலட்சத்து 84 ஆயிரம் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் மேலும் 31,000 வீடுகள் ரூ.99 கோடி செலவில் கட்டி முடிக்கப்படும்.

16. கல்வி, தகவல், பயிற்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு துப்புரவு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதை மாவட்ட அளவில் ஓர் இயக்கமாக நடத்திடத் திட்டமிட்டு இந்த நிதியாண்டில் 4 மாவட்டங்களிலும், வரும் நிதியாண்டில் மேலும் 4 மாவட்டங்களிலும் "ஊரகத் தூய்மை இயக்கம்" (Rural Sanitation Campaign) என்ற பெயரில் ரூ.12 கோடி செலவில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும்.

## *நிர்வாக சீரமைப்பு*

17. பள்ளி மாணவர்களுக்குத் தேவையான சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ்களை பள்ளிகளிலேயே வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று கடந்த நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறு, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவியரிடமிருந்து 15 இலட்சத்து 65 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவையனைத்தும் நடப்புக் கல்வி ஆண்டு முடிவதற்குள் பள்ளிகளிலேயே வழங்கப்பட்டுவிடும்.

18. அரசின் நடவடிக்கைகள் ஒளிவு மறைவின்றி அமைவதற்கேற்ற வகையில், பொது நலனையொட்டிய முக்கியக் கொள்கைக் குறிப்புகள், ஒப்பந்தப்புள்ளி அறிக்கைகள், மக்கள் சாசன அறிக்கைகள், புள்ளி விபரங்கள் போன்றவை இணையத்தில் www.tn.gov.in என்ற முகவரியிட்ட தகவல் தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அரசு விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் தமிழிலும் ஆங்கிலத்திலும் இந்த இணையத்தின் தகவல் தளத்தில் அவ்வப்போது இடம் பெற்றிட வகை செய்யப்பட்டுவிட்டது.

19. பத்திரப் பதிவுத் துறையில் பொதுமக்களுக்குப் பயனுள்ள பல வசதிகள் விரைவில் கிடைத்திடும் வகையில் இதுவரை 25 பதிவு அலுவலகங்களில் கணினி வசதி செய்யப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் இந்த வசதி மற்ற பதிவு அலுவலகங்களுக்கு விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் வில்லங்கச் சான்றிதழ், திருமணப்பதிவுச் சான்றிதழ் போன்றவற்றை விரைவில் பெற்றுக் கொள்ள முடியும்.**

20. வட்டாட்சியர் அலுவலகங்களில் 'அ' பதிவேடு மற்றும் சிட்டா போன்ற நில சம்பந்தமான ஆவண நகல்கள் வழங்குதல், வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்ற சான்றிதழ்கள் வழங்குதல், முதியோர் உதவித் தொகை அனுப்புதல் போன்ற அனைத்து நிர்வாகப் பணிகளையும் கணினிமயமாக்க திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக மென்பொருட்கள் தயாரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. **இவற்றை ஆய்வு செய்து மாநிலம் முழுவதும் இத்திட்டத்தை விரிவாக்க, பொருத்தமான மென்பொருள்கள் தேர்ந்தெடுப்பதற்கு, டாக்டர் திரு. அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையைப் பெற்று, வரும் நிதி ஆண்டில் மாநிலத்தின் ஏனைய வட்டாட்சியர் அலுவலகங்களும் முழுமையாக கணினிமயமாக்கப்படும்.**

21. அனைத்து மாவட்ட வளர்ச்சி முகமைகளும் நடப்பாண்டில் கணினி மயமாக்கப்பட்டு, திட்டப் பணிகளின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. வரும்

நிதியாண்டில் மற்ற மாவட்டங்களில் 52 ஒன்றியங்களில் கணினி மயமாக்கும் பணி மேற்கொள்ளப்படும். அனைத்து ஒன்றியங்களும் அடுத்த இரண்டாண்டுகளில் கணினி மயமாக்கப்படும்.

**22. நில அளவையில் அண்மைக் கால விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்திட விண்கோள் குறிப்பைக் கொண்டு அளவீடு செய்யும் விண்கோள் நில அளவை (Global Positioning System) முறையை வரும் நிதி ஆண்டில் ஒரு வட்டத்தில் சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.**

**23. திருவாரூர், திருவண்ணாமலை, நாமக்கல், கரூர், நாகப்பட்டிணம், தேனி, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள் கட்டும் பணி வரும் செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும்.**

**24. வெள்ளை அறிக்கை: மாநில அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் இட ஒதுக்கீடு, அவர்களின் தற்போதைய பிரதிநிதித்துவம் மற்றும் இதன்மீது அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்று சட்டமன்றத்தில் நடப்புக் கூட்டத் தொடரில் வைக்கப்படும்.**

**25. வரும் நிதியாண்டில் 6000 பள்ளி ஆசிரியர்களும், காவலர்கள் உள்ளிட்ட சுமார் 4000 சீருடைப் பணியாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவார்கள்.**

## *ஊரகக் குடிநீர் திட்டம்*

26. 2050ஆம் ஆண்டில் உலகெங்கிலும் 200 கோடிக்கும் மேற்பட்டோர் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிப்பிற்கு ஆளாவார்கள் என்று ஐ.நா. சபையின் சுற்றுச்சூழல் திட்டம் (United Nations Environment Programme) கூறுகிறது. நெதர்லாந்து நாட்டில் அண்மையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தண்ணீர் மன்றமும்

அதையொட்டிய மாநாடும் (Second World Water Forum and Ministerial Conference) 2050ஆம் ஆண்டில், இந்தியாவில் ஆறு மாநிலங்கள் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு உள்ளாகும் என்றும், அதில் ஒன்று தமிழ்நாடு என்றும் குறிப்பிட்டிருக்கிறது.. மழை கொட்டும்போது அதில் பத்து சதவிகிதத்தைக் கூட சேமித்து வைக்க முடியாத நிலையும், ஒருநாள் பெய்யும் பெருமழை கடலில் கலப்பதைச் சேமித்து வைத்தால் சென்னை நகரின் ஓராண்டுத் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்கிற நிலையும் மாநிலமெங்கும் நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் குறையும் நிலையும் நாம் அறிந்தவையே. எனவே, வருமுன் காப்பதைக் கடமையாகக் கொண்ட தமிழக அரசு இன்னும் ஐம்பது ஆண்டுகளில் ஏற்படவிருக்கும் நெருக்கடியை எதிர் கொள்ளவும், வெற்றி பெறவும் உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்ய ஒரு நிபுணர் குழுவை அமைத்து, மாநில முழுவதும் மழை நீரை வீணாக்காமல் சேமித்து உபயோகப்படுத்தவும், நிலத்தடி நீரைப் பாதுகாத்து அதிகரிக்கவும் எடுக்கப்பட வேண்டிய முயற்சிகளைப் பற்றி அறிக்கையினைப் பெற்று அதனைச் செயற்படுத்த முன் வரும்.

27. மாநிலத்தில் ஊரகக் குடிநீர் வழங்கல் பணிகளுக்காக நடப்பு நிதியாண்டின் ஒதுக்கீடான ரூ.450 கோடி என்பது, வரும் நிதியாண்டில் ரூ.500 கோடியாக உயர்த்தப்படுகிறது..

28. ஊரகப் பகுதிகளில் அனைவருக்கும் முதற் கட்டமாக, நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் அளிக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு கொள்கை வகுத்தது. 1996 ஆம் ஆண்டு ஏறக்குறைய 32,000 குடியிருப்புகள் அந்த நிலையை எய்தாமல் இருந்தன. கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.960 கோடி செலவில் பெருமளவில் ஊரகக் குடிநீர் திட்டங்களை நிறைவேற்றியதால், இதுவரை 21,000 குடியிருப்புகளுக்குப் போதிய குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் எஞ்சிய குடியிருப்புகளிலும் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் என்ற அளவுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படும்.

## நகர்ப்புற குடிநீர்த் திட்டம்

29. பொன்விழா ஆண்டு சிறப்புத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 12 நகராட்சிகளும், 25 பேரூராட்சிகளும் பயன்பெறும் வகையில், ரூ.50 கோடி மானிய உதவியுடன் புதிய குடிநீர்த் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதேபோன்று, போதிய நிதியாதாரம் இல்லாத, குறைவாகக் குடிநீர் வசதி பெறுகின்ற 76 நகரங்கள் வரும் ஆண்டுக்கு தேர்வு செய்யப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான மதிப்பீட்டுத் தொகையில், அரசு வழங்கும் மானியத் தொகையின் அளவு ரூ. 80 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

30. அவினாசி அத்திக்கடவு குடிநீர் திட்டத்திற்கான ஆய்வு அறிக்கை அடுத்த மாத இறுதியில் பெறப்பட உள்ளது. பெற்றவுடன் அதைப் பரிசீலித்து உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

## நகர்ப்புற வளர்ச்சி

31. இந்தியாவிலேயே அதிகமான நகர்ப்புறத்தைக் கொண்ட மாநிலங்களில் ஒன்று தமிழ்நாடு ஆகும். ஆனால் அவற்றில் போதுமான கழிவுநீர் அகற்றும் வசதி இல்லாத அவல நிலை சுகாதாரக் கேட்டிற்குக் காரணமாக விளங்குவது இந்த 21ஆம் நூற்றாண்டில் இருக்கக் கூடாத, தவிர்க்கக் கூடிய நிலையாகும். சென்னையை ஒட்டிய ஆலந்தூர் நகரில் 'நமக்கு நாமே' திட்டத்தின் அடிப்படையைப் பின்பற்றி ஒவ்வொரு வீட்டாரும் தங்களுக்குரிய பங்குத் தொகையை செலுத்தி தனியார் முதலீட்டோடு இணைந்து நகருக்கே பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வந்து, மிக வேகமாகப் பணிகள் நடைபெறுகின்றன. நமக்கு நாமே அடிப்படையில் அரசு தருவது ரூபாய் மூன்று கோடி, மக்கள் முன் வந்து தருவது ரூ.6 கோடி, தனியார் முதலீடு ரூ.8 கோடி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் ரூ.16 கோடி. இதில் 11,714 வீட்டார் வீட்டிற்கு ஐந்தாயிரம் ரூபாய் வீதம் கொடுத்துள்ளனர். இந்த "ஆலந்தூர் மாடல்" நமக்கு நாமே அடிப்படையில் நிறைவேற்றிட எத்தனை நகராட்சிகள், பேரூராட்சிகள் முன் வந்தாலும் அங்கெல்லாம் பாதாளச் சாக்கடை வசதி செய்து தர தமிழக அரசு முன் வரும்.

32. வடசென்னையில் உள்ள எண்ணூர் நெடுஞ்சாலையில் கடலரிப்பைத் தடுப்பதற்காக பொதுப்பணித்துறை அமைச்சர் தலைமையில் பிப்ரவரி மாதம் ஒரு குழு நெதர்லாந்துக்குச் சென்று அங்குள்ள நிபுணர்களுடன் கலந்தாலோசித்தது. நீண்ட காலமாக இருந்துவரும் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாணும் பொருட்டு நெதர்லாந்து அரசு உதவியுடன் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு செயலாக்கப்படும்.

## *பொது விநியோகம்*

33. மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் மாநிலங்களுக்கு அளிக்கும் அரிசி விலை உயர்த்தப்பட்டிருப்பது கவலைக்குரியதாக உள்ளது. இந்த விலை உயர்வினை ரத்து செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

34. நியாய விலைக் கடைகளில் பொருள்களை வாங்குவோரில் மகளிரே அதிகமாக உள்ளதாலும், மகளிரே நடத்தும் கடைகள் சிறப்பாக செயல்பட்டு வருவதாலும் மகளிர் நடத்தும் நியாயவிலைக் கடைகளுக்கு அரசு ஊக்கம் அளித்து வருகிறது. மாநிலத்தில் தற்போது 210 நியாய விலைக் கடைகள் மகளிரால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் இதனை அதிகரிக்க இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

35. தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள விலைக் கண்காணிப்புக் குழு இன்றியமையாப் பொருட்களின் விலைகளை வாரந்தோறும் கண்காணித்து வருகிறது. தமிழகத்தில் உணவு தானியங்கள், சமையல் எண்ணெய், பயறு வகைகள், காய்கறிகள் ஆகியவற்றின் விலைகள் கடந்த ஓராண்டில் பொதுவாக நிலையாக உள்ளன.

## *வேளாண்மை*

36. இந்த ஆண்டில் தமிழகத்தில் பெய்துள்ள மழையின் அளவு இயல்பான அளவை விடச் சிறிது குறைவாக இருந்த போதிலும், ஆறுகள், ஏரிகள், கால்வாய்களில் தூர்வாரும் பணி போன்ற நீர் மேலாண்மை

(water management) நடவடிக்கைகளினாலும், நம் உழவர் பெருமக்களின் அயராத உழைப்பினாலும், நமது மாநிலத்தில் உணவு தானிய உற்பத்தி கடந்த ஆண்டில் 94 இலட்சம் டன் என்ற நிலையிலிருந்து இந்த ஆண்டு 103 இலட்சம் டன் என்ற அளவுக்கு அதிகரிக்கக் கூடும்.

37. தரிசு நில மேம்பாடு, அரசின் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. முதலமைச்சர் தலைமையில் தரிசு நில மேம்பாட்டுக் குழுமம் (Wasteland Development Authority) ஒன்றை அரசு அமைத்துள்ளது. இந்த ஆண்டில் ரூ.5.56 கோடி செலவில், பத்து மாவட்டங்களில் 25,000 ஏக்கர் தரிசு நிலங்களில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு முதன் முறையாக முந்திரி, வேம்பு, பழச்செடிகள் போன்றவை அங்கே பயிரிடப்பட்டுள்ளது. **வரும் ஆண்டில், மேலும் 75,000 ஏக்கர் தரிசு நிலங்கள் 24 மாவட்டங்களில் மேம்படுத்தப்படும். அடுத்து வரும் 10 ஆண்டுகளில், ஏறத்தாழ 25 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை மேம்பாடு செய்வதற்கான தொலை நோக்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.**

38. தொடங்கப்பட்ட நான்கு மாதங்களில் இதுவரை மொத்தம் 32 உழவர் சந்தைகள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த 32 உழவர் சந்தைகளில் 23–3–2000 தேதி வரை ரூ.15 கோடி மதிப்பிற்கு 2 கோடி 46 இலட்சம் கிலோ காய்கறிகள் விற்பனையாகியுள்ளன. மீதமுள்ள 68 உழவர் சந்தைகள் வரும் நிதியாண்டிலேயே துவக்கப்படும்.

## *முந்திரி சாகுபடித் திட்டம்*

**39. பலவகை தரிசு நிலங்களை பயன்படுத்தவும், மண் அரிப்பினை தடுக்கவும், கடல் ஓரங்களில் காற்றுத் தடை ஏற்படுத்தவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் முந்திரி விவசாயம் பெரிதும் உதவுகிறது. முந்திரி சாகுபடியை அதிக அளவில் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், முந்திரி சாகுபடிக்கு ஏற்ற அரசுக்குச் சொந்தமான தரிசு நிலப் பரப்பினைத் தேர்வு செய்து, அவற்றை நீண்ட கால குத்தகை அடிப்படையில் முந்திரி சாகுபடி செய்ய முன்வருவோருக்கு ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

## *பாசனம்*

40. பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களை நவீனப்படுத்திடவும், கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பாசனத் திறன் அதிகரிப்புப்பணிகளை மேற்கொள்ளவும், அடவிநயினார், கொடுமுடியாறு, நம்பியாறு, வடக்கு பச்சையாறு, கிருதுமால் அணைக்கட்டு, மொரதானா திட்டம், ராஜாத் தோப்புகானாறு திட்டம், பொய்கையாறு திட்டம், சோத்துப்பாறை திட்டம் ஆகிய 9 பாசனத் திட்டங்களை விரைந்து முடிக்கவும் உலக வங்கி உதவியுடன் பணிகள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை ரூ.763 கோடி மதிப்பீட்டில் 268 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் இப்பணிகளுக்காக ரூ.218 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

41. பாசனப் பகுதிகளில் உள்ள கால்வாய்களில் தூர்வாருவதற்கு, இந்த ஆண்டில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வரும் நிதி ஆண்டிலும் ரூ.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்தகைய பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

42. திருச்சிராப்பள்ளி நகரில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளச்சேதம் மீண்டும் நிகழாமல் தடுக்கும் பொருட்டு வெள்ளத் தடுப்புத் திட்டம் ஒன்று சுமார் ரூ.50 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குடமுருட்டி ஆறு காவிரியுடன் கலக்குமிடத்தில் உள்ள தடைகள் நீக்கப்பட்டு, குடமுருட்டி, அரியாறு மற்றும் கோரையாறு, கொடிங்கால் வடிகால் ஆகியவை அகலப்படுத்தப்படும். உய்யக் கொண்டான் வாய்க்காலின் கரைகள் பலப்படுத்தப்படும்.

## *விவசாயிகளின் நலன்*

43.தமிழக வரலாற்றில் முதன்முறையாக நிதிநிலை அறிக்கை தயாரிக்கும்முன் மாநிலத்திலுள்ள விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து, அவர்களுடைய கருத்தினை பெற்று, பரிசீலித்து பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன:

- புதிய வேளாண் கொள்கை ஒன்றை உருவாக்கவும், அதன் செயல்பாட்டினை கண்காணிக்கவும் முதலமைச்சரை தலைவராகவும் வேளாண்மைத்துறை அமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் வல்லுநர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும்.

- காய்கறிகள், பழங்கள் போன்ற பொருட்களை வீணாகாமல் பாதுகாப்பதற்கு தேவையான இடங்களில் வேளாண்மை விற்பனைக் குழுக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் மூலமாக குளிர்பதனக் கூடங்கள் அமைக்கப்படும்.

- கிராமங்களில் சிமெண்டாலான களங்கள் போன்ற வேளாண்மைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உள்ளடக்கிய நமக்கு நாமே திட்டத்திற்கான ஒதுக்கீடு, ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, வரும் நிதி ஆண்டில் ரூ.30 கோடியாக அதிகரிக்கப்படும்.

- மாவட்டங்களில் வேளாண்மை விற்பனை குழுக்களின் மூலம் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வரும் விவசாயிகளுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு, வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

- பாசன நீர் பயன்படுத்துவோர் குழுக்கள் உருவாக்கப்பட்டு பாசனத்தை இயக்கவும், பராமரிக்கவுமான பொறுப்பு, இக்குழுக்களுக்கு தேவையான நிதி ஆதாரங்களோடு அளிக்கப்படும். இதற்காக சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட முன் வடிவு இக்கூட்டத் தொடரில் சட்டமாக்கப்படும்.

- கிராமப்புறங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிச் செயலாளர்கள் ஒரே இடத்தில் பல ஆண்டுகளாக தொடர்ந்து இருப்பதைத் தவிர்க்க, ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கிக்கு மாற்றல் செய்யும் முறையை ஏற்று அமுல்படுத்தப்படும்.

- நபார்டு நிறுவனத்தின் நிதி உதவியைக்கொண்டு 23 மாவட்டங்களில் 44 சிறு பாசன ஏரிகள் ரூ.19 கோடி செலவில் சீர்படுத்தப்படும். வரும் நிதியாண்டில் மேலும் அதிக நிதியுதவி பெறப்பட்டு பாசன ஏரிகள் சீர்படுத்தப்படும்.

* நில உரிமைப் பதிவேடு (Patta Pass Book) திட்டம் தற்போது வேலூர் மாவட்டத்தில் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், கோயம்பத்தூர், மதுரை, தேனி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நில உரிமைப் பதிவேடுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டன. இவற்றில் தற்போதைய நிலையை பிரதிபலிக்கும் வகையில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு, நில உரிமைப் பதிவேடுகள் சட்டத்தின் கீழ் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு வரும் சூன் மாதத்திற்குள் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும். இதர மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் வரும் நிதி ஆண்டு இறுதிக்குள் நில உரிமைப் பதிவேடுகள் வழங்கப்படும்.

- 30.6.99–க்கு முன்பு தவணை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களுக்கு, 30.6.2000–க்குள் வட்டியுடன் கடனை செலுத்தும் சிறிய, பெரிய, அனைத்து விவசாயிகளுக்கும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

- மேலும், திருப்பிச் செலுத்தப்படும் நடப்பு கடன் தொகை வட்டியில் கடந்த ஆண்டு 6.25 சதவீதம் ஊக்குவிப்புத் தொகையாக அரசின் சார்பில் வழங்கப்பட்டதற்கு மாறாக இந்த ஆண்டு 7 சதவீதம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும். நடப்பாண்டில் ஏற்கெனவே முழு கடன் பாக்கியை செலுத்தியவர்களுக்கும் இது பொருந்தும். இத்திட்டத்தால் சுமார் 10 இலட்சம் விவசாயிகள் பயன் அடைவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

- விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக இதுவரை விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (Track Rent) ரத்து செய்யப்படும்.

- பரம்பிக்குளம் ஆளியாறு பாசனத் திட்டப் பகுதிகளில் மடை விட்டு மடை மூலம் ஒவ்வொரு பாசனப் பருவத்திலும் தண்ணீர் விடப்பட வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கையைப் பரிசீலிக்க திரு.மோகனகிருட்டிணன் தலைமையில் நியமிக்கப்பட்ட உயர்மட்டக்குழு அக்கோரிக்கையை ஏற்கலாமென்று பரிந்துரைத்துள்ளது. இதனை ஏற்று பரிட்சார்த்தமாக இத்தகைய பாசன முறை, வரும் ஆகஸ்டு மாதம் 1 ஆம் நாள் முதல் துவங்க இருக்கும் பாசனப் பருவத்திலிருந்து செயல்படுத்தப்படும்.

- தனியார் கரும்பாலைகள் கொடுக்க வேண்டிய விவசாயிகளின் பாக்கியைத் தீர்த்திட ஆலை அதிபர்களை அழைத்துப் பேசப்படும்.

விவசாயிகள் அளித்த மற்ற ஆலோசனைகளையும் கோரிக்கைகளையும் பரிசீலித்து உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

## *மீனவர் நலன்*

44. சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், இதுவரை 16000 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு அவற்றுள் 11500 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 4500 வீடுகள் கட்டும் பணி விரைவில் முடிவடையும். வரும் நிதியாண்டில் மேலும் 4000 வீடுகள் ரூ.14.80 கோடி செலவில் கட்டப்படும். ஆக, 1996 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட வண்ணம், மீனவர்களுக்கு ஐந்தாண்டு காலத்தில் 20000 வீடுகள் கட்டும் திட்டம் வரும் நிதியாண்டில் நிறைவுறும்.

45. மீனவர்கள், மீன்களை விற்பதற்குப் படும் சிரமங்களை நீக்குவதற்கும், சுகாதாரமான முறையில் விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கும், 'மீனவர் அங்காடி' தமிழகத்தில் முதற்கட்டமாக 10 இடங்களில் அமைக்கப்படும். நவீனவசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பறை கொண்ட விற்பனைக் கூடங்களாக அவை அமைக்கப்படும். மீன்கள் தரமாகவும், கெடாமலும் விற்பதற்கு வசதியாக ஒட்டுமொத்த

ஏலம் நடக்கும் இடங்களில் ஏலக் கூடமும் (Auction hall) உலர்களமும் (Drying yard) அமைத்துத் தரப்படும்.

46. தமிழ்நாட்டில் 245 உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களில் 56,169 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளனர். வரும் நிதியாண்டில் உள்நாட்டு மீனவர்களுக்கு 1000 வீடுகள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கட்டப்படும்.

## *கால்நடைப் பாதுகாப்பு*

47. கால்நடைகளின் பாதுகாப்பு, இன விருத்தி ஆகியவற்றை அதிகரிக்கும் வகையில் கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. தொடங்கப்பட்ட இரண்டு மாதங்களில் 22–3–2000 வரை 600 முகாம்கள் நடத்தப்பட்டு 20 இலட்சத்து 88 ஆயிரம் கால்நடைகள் மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் மாதம் ஒரு முகாம் என்ற வீதத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் 4620 முகாம்கள் நடத்தப்படுவதற்கு மருந்துகள் போன்ற செலவினத்துக்காக மட்டும் ரூபாய் 2.29 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## *சுற்றுப்புறச் சூழலும் வனவளமும்*

48. தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டம் 1997–98 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு 1999 ஆம் ஆண்டு இறுதிவரை சுமார் 5 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு நிலங்களில் வனவளர்ப்புப் பணிகள் ரூபாய் 211 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் 200 கிராமங்களில் ஒரு இலட்சத்து 89 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ரூ.109 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

49. சென்னை உள்ளிட்ட ஆறு மாநகராட்சிகளிலும், அவற்றையொட்டியுள்ள பகுதிகளிலும், ஈரோடு, குமாரபாளையம், பவானி, பள்ளிப்பாளையம் ஆகிய நகரங்களிலும் காற்று, நீர், ஒலி ஆகியவற்றால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்தி அப்பகுதிகளுக்கு அழகூட்டிடவும்,

இந்த நகரங்களில் முக்கிய சாலைகளின் இருமருங்கிலும், பிற இடங்களிலும் சிறப்பு வகை மரங்களை நட்டு பராமரித்திடும் வகையில் ''மரம் வளர்த்து மாசினைக் குறைக்கும் சுற்றுச் சூழல் மேம்பாடு திட்டம்'' மத்திய அரசின் உதவியுடன் ரூபாய் 4 கோடியே 56 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## *சாலைகள்*

50. ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் இணைப்புச் சாலை வசதியில்லாமல் இருந்த 301 கிராமங்களுக்கு நடப்பாண்டில் இணைப்புச் சாலை வசதி செய்து கொடுக்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு இப்பணி முடிக்கப்பட்டு, தமிழகத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் இணைப்புச் சாலை வசதி இல்லாத கிராமமே இல்லை என்ற நிலையை நாம் எய்தியுள்ளோம். அடுத்த கட்டமாக, 500 முதல் 1000 வரையிலான மக்கள் தொகை கொண்ட, இணைப்புச் சாலை வசதி இல்லாத 340 கிராமங்களுக்கு நடப்பாண்டில், சுமார் ரூ.123 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில், மேலும் 140 கிராமங்களுக்கு சுமார் ரூ.90 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும்.

51. சாலை மேம்பாட்டுக்காக தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்தின் (Rural Infrastructure Development Fund) மூலமாக இதுவரை ரூ.701 கோடி மதிப்பீட்டில் 2865 சாலைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் இதுவரை 2062 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் மேலும் 803 பணிகள் முடிக்கப்படும். இத்திட்டப் பணிகளுக்காக வரும் நிதி ஆண்டில் ரூ.231 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, இதர மாவட்டச் சாலைகள் என்ற வகையைச் சேர்ந்த 4290 கிலோமீட்டர் முக்கியமான சாலைகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.159 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாகத் தொடரும் வகையில், வரும் நிதியாண்டில் 8235 கிலோமீட்டர் இதர மாவட்டச் சாலைகள் மேம்படுத்தப்படும்.

## போக்குவரத்து

52. கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களால் 8,500 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் பேருந்து பயணக் கட்டண வீதங்கள் மாற்றியமைக்கப்பட்ட போதிலும், அவை உயர்ந்து வரும் நடைமுறைச் செலவுகளை ஈடுகட்டப் போதுமானதாக இல்லை. எனினும் மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது நமது கட்டண வீதங்கள் நாட்டிலேயே மிகக் குறைந்தவையாகவே அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

53. கிராமப் புறங்களில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த அரசால் தொடங்கப்பட்ட மினி பஸ் திட்டத்தின் கீழ் தற்போது 714 மினி பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த எண்ணிக்கை வரும் ஆண்டில் மேலும் உயரும்.

## மின்சக்தி

54. வரும் நிதியாண்டில் தமிழ்நாடு மின்வாரியத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.1034 கோடியாக இருக்கும்.

55. தமிழகத்தில் மொத்த மின் உற்பத்தித் திறன் 1996 ஆம் ஆண்டு 6908 மெகாவாட் என்பதற்கு மாறாக தற்போதைய மின் உற்பத்தித் திறன் 7120 மெகாவாட் அளவிற்கு உயர்ந்துள்ளது. 686 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மூன்று தனியார் மின் உற்பத்தி திட்டங்களின் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. 1156 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட மேலும் இரண்டு தனியார் மின் உற்பத்தி திட்டங்களின் கட்டுமானப் பணி வரும் நிதியாண்டில் தொடங்கும். தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 30 மெகாவாட் திறன் கொண்ட பார்சன் பள்ளத்தாக்கு புனல் மின் நிலையம் இந்த மாதம் 20ம் தேதியன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. 107 மெகாவாட் திறன் கொண்ட கோவில்களப்பால் மின்திட்டம் வரும் நிதி ஆண்டில் மின் உற்பத்தித் தொடங்கும். வரும் நிதியாண்டில் மின்

உற்பத்தி மேலும் 696 மெகாவாட் அளவுக்கு அதிகரிக்கும். மின் இழப்பினை மேலும் குறைத்திட, வரும் நிதி ஆண்டில் ரூ.620 கோடியை மின்வாரியம் ஒதுக்கீடு செய்துள்ளது.

## *தொழில் வளர்ச்சி*

56. இந்த அரசு பின்பற்றி வரும் தொழில் நேயமிக்க கொள்கை இம்மாநிலத்தில் தொடர்ந்த தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி புரிகின்றது. பல பெரும் தொழிற்சாலைகள் ஒன்றன்பின் ஒன்றாக உற்பத்தியைத் தொடங்கி வருகின்றன. ஹுண்டாய், மிட்சுபிஷி நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கிவிட்ட நிலையில், நடப்பு நிதியாண்டில் ஃபோர்டு இந்தியா நிறுவனமும் அதைச் சார்ந்த ஆட்டோ துணைப்பாகங்களை தயாரிக்கும் பல தொழிற்சாலைகளும் இயங்கத் தொடங்கியுள்ளன.

57. சென்னையில் இரண்டாவது பன்னாட்டு விமான நிலையத்தை ஏற்படுத்துவதற்கான முதல்நிலை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை அமைப்பதற்கான வழிவகைகளை ஆய்வு செய்திட தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (TIDCO) மூலம் ஆலோசகர் நியமிக்கப்பட்டு, அந்த ஆய்வும் முடிக்கப்பட்டுள்ளது. இவ்விமான நிலையம் ஏற்படுத்துவதற்குத் தேவையான ஒப்புதலைப் பெற மத்திய அரசிடம் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம்.

**58. நாங்குனேரி உயர்தொழில் நுட்ப தொழிற்பூங்காவுக்காக (High-Tech Industrial Park) சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. விரிவான சாத்தியக் கூறு அறிக்கை (Detailed Feasibility Report) ஒன்றினை இரு பிரபல நிறுவனங்கள் தந்திருக்கின்றன. அங்கு ஒரு ஏற்றுமதி வளர்ச்சி மையம் (Export Promotion Zone) உருவாக்கிட மத்திய அரசிடம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கக் கூடிய இந்த மாபெரும் திட்டப் பணி வரும் நிதியாண்டில் தொடங்கப்படும்.**

59. கடலூரில் தொழிற்பூங்கா : கடலூர் அருகே சுமார் 950 ஏக்கர் பரப்பளவில் இந்த ஆண்டு தொழிற் பூங்கா (Industrial Park) உருவாக்கும் பணி துவங்கப்படும்.

60. ஆடை தயாரிக்கும் பூங்கா : (Garment Park) : சென்னைக்கு அருகே 200 ஏக்கர் பரப்பளவில் ஏற்றுமதி வளர்ச்சி மையம் ஒன்று ஆடை தயாரிப்பதற்கென்றே உருவாக்கப்படும். இத்தகைய தொழிற்கூடங்கள் பல நூறு பேருக்கு, குறிப்பாக பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும்.

61. மலர்ப் பூங்கா : (Floriculture Park) : ஒசூரில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு நவீன மலர்ப் பூங்கா 200 ஏக்கர் பரப்பளவில் துவங்கப்படும். இதில் 125 ஏக்கர் பரப்பளவில் ரோஜாச் செடிகள் பயிரிடப்பட்டு, கிளிப்பிங்ஸ் செய்யப்பட்டு, அம்மலர்கள் தொடர்ந்து குளிர்சாதனப் பெட்டிகளில் பாதுகாக்கப்பட்டு பெங்களூர் மற்றும் சென்னை விமான நிலையங்களிலிருந்து ஐரோப்பா, கிழக்காசிய நாடுகள், ஜப்பான், ஆஸ்திரேலியா, அரேபியா நாடுகள் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும். அந்தக் குளிர் சாதன வசதியைப் பயன்படுத்தி, மலர் பருவ காலங்களைத் தவிர்த்த நேரங்களில், அப்பகுதியில் விளையும் சேலத்து மாம்பழம் உள்ளிட்ட 6,500 டன் பழங்கள், காய்கறிகள் தூரக் கிழக்கு, மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இவை அனைத்தும் கூட்டுத் துறையின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. உலக வங்கி அமைப்பின் பன்னாட்டு நிதி நிறுவனம் (International Finance Corporation) தரும் இரண்டரை கோடி ரூபாய் ஈவுத் தொகையுடன் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் வரும் நிதியாண்டில் செயல்படத் தொடங்கும்.

62. தகவல் தொழில் நுட்பத்துறையில் (Information Technology) அதிக முதலீடு செய்ய வேண்டிய அவசியத்தை மத்திய அரசுக்கு நாம் வலியுறுத்தியதின் தொடர்பாக நடப்பாண்டில் தொலைத் தொடர்புத் துறையில் ரூ.1377 கோடியாக இருந்த மத்திய அரசின் முதலீடு வரும் ஆண்டில் ரூ.2079 கோடியாக உயருகிறது.

63. தமிழகத்தின் நீண்ட நாளையத் தேவையான, நமது வாணிப மற்றும் தொழில் வளர்ச்சி முயற்சிகளுக்கு உதவுகின்ற அனைத்து வசதிகளுடன் கூடிய, கண்காட்சி–மாநாட்டு மையம் ஒன்றை உருவாக்கிட வேண்டி தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் (TIDCO) மத்திய அரசின் இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்புடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது. இம்மையத்தின் முதல் கட்டம் இவ்வாண்டு அக்டோபர் மாதத்துக்குள் தயாராகிவிடும்.

64. சென்னைக்கு அருகே எண்ணூரில் சுமார் ரூ.6000 கோடி செலவில் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலை ஒன்றை உருவாக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பெரியதோர் ஜப்பானிய கம்பெனியான மிட்சூயி (Mitsui) உடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

## *உயிரியல் தொழில்நுட்பம்*

65. உயிரியல் தொழில்நுட்பம் (Bio-technology) அதிக வேலை வாய்ப்பை உருவாக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய தொழில் நுட்பமாகும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு, இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னைக்கு அருகே கேளம்பாக்கத்தில் பெண் தொழில் முனைவோர்களுக்கு என்று தனியாக உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை உருவாக்கி வருகின்றது. இது அடுத்த சில மாதங்களில் செயல்படத் துவங்கும். வளர்ந்து வரும் இத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை உருவாக்க ஆய்வறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. டாக்டர் திரு. எம்.எஸ்.சுவாமிநாதனைத் தலைவராகக் கொண்ட நிபுணர் குழு இந்த அறிக்கையைப் பரிசீலித்து தனது பரிந்துரைகளை அளிக்கும். அப்பரிந்துரைகளின் அடிப்படையில் மாநில உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை (biotechnology policy) ஒன்று உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும். நாட்டிலேயே இத்தகைய கொள்கையை உருவாக்கிச் செயல்படுத்தும் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கும்.

66. தமிழகம் உயிரியல் வளம் செறிந்த மாநிலமாகும். தமிழகத்தில் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பாகுபடுத்தப்பட்டுள்ள நிலங்களில் பல்வகைப்பட்ட தாவர வகைகளும், உயிர்வாழ் இனங்களும் நிறைந்துள்ளன. இந்த உயிரியல் வளத்தைப் பாதுகாத்து மேம்படுத்திட வேண்டி உயிரியல் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துவதற்கு அரசு உயர் முக்கியத்துவம் அளிக்கும். இவ்வகையில் மன்னார் வளைகுடா, பிச்சாவரம், முத்துப்பேட்டை ஆகிய இடங்களிலுள்ள உயிரியல் வளத்தைப் பேணி மேம்படுத்திட உரிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். ஏற்கெனவே மன்னார் வளைகுடாப் பகுதியைப் பாதுகாக்க உலக சுற்றுச்சூழல் நிதி நிறுவனம் (Global Environmental Fund) 7.8 மில்லியன் டாலர் நிதியுதவி அளிக்க முன் வந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

67. நவீன தொழில்நுட்ப விஞ்ஞானத்தைக் கொண்டு, தொழில்துறையிலும், விவசாயத்திலும், நிர்வாகத்திலும் ஒரு மாபெரும் முன்னேற்றத்தைக் கொண்டு வருவதில் தமிழக அரசு முன்னணியில் இருக்கிறது. அதில் ஒரு கட்டமாக வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கு (Agricultural Extension Officers) உரிய பயிற்சி அளித்து விவசாயிகளுக்கு துணை புரியும் அறிவியல் அலுவலர்களாக (knowledge workers) மாற்றியமைப்போம். பயிற்சி பெற்ற வேளாண் விரிவாக்க அலுவலர்கள் 'துல்லியமான விவசாயத்திற்கு' (precision farming) பெரும் துணையாக இருப்பார்கள். உரிய நேரத்தில் உரிய அளவு இடுபொருள் (input) பயன்படுத்தி சாகுபடி செலவைக் குறைத்து வருமானத்தை அதிகமாகப் பெறுவதற்கு இது பெரிதும் பயன்படும்.

## *தகவல் தொழில்நுட்பம்*

68. பல ஆண்டுகளை வீணடித்து விட்டு; இந்தியத் தகவல் தொழில் நுட்பப் புரட்சியில் (Indian Information Technology Revolution) தாமதமாக நுழைந்திட்ட தமிழ் நாடு, கழக அரசு உருவான கடந்த நான்காண்டுகளில், ஹார்வர்டு பல்கலைக் கழக அறிக்கை குறிப்பிடுவது போல "குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை" (Remarkable Progress) அடைந்திருக்கின்றது. தமிழ்நாட்டிலிருந்து குறிப்பிட்டுச்

சொல்லும் அளவிற்கு மென்பொருள் ஏற்றுமதியே இல்லை என்கிற நிலையிலிருந்து 1998–99ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியான மென் பொருட்களின் மதிப்பு ரூ. 1,246 கோடி என்பதும், இது 1997–98ஆம் ஆண்டு ஏற்றுமதி மதிப்பை விட 192 சதவிகிதம் அதிகம் என்பதும் நாம் பெருமைப்படும் சாதனையாகும். அது மட்டுமல்ல; இது நாம் உருவாக்கிய தகவல் துறைக் கொள்கைக்கும், அதைச் செயல்படுத்திய நடவடிக்கைகளுக்கும் கிடைத்த மகத்தான வெற்றியாகும். இந்தியாவிலேயே தகவல் தொழில் நுட்பத்திற்காக தனிக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கென்று அரசில் தனித் துறையை உருவாக்கிய மாநிலமும் தமிழ்நாடு ஆகும். இதன் விளைவாக, இன்று தமிழ்நாட்டில் தான் இந்தியாவிலேயே மிகவும் அதிகமான மென்பொருள் வல்லுநர்கள் (Software Professionals) இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தான் அதிகமான மெயின் பிரேம் கணினித் திறன் (largest main frame computing capacity) இன்று இருக்கிறது. மல்டி மீடியா சாப்ட்வேர் அப்ளிகேஷன்ஸ் (Multimedia software applications) அதிகமாகத் தயாரிக்கப்படும் தலைநகராக தமிழகத்தின் தலை நகர் சென்னை உருவாகிக் கொண்டு வருகிறது. NASSCOM என்கிற அமைப்பு மென்பொருள் திட்டங்கள் தயாரிப்பதற்கு இந்தியாவிலேயே சிறந்த இடம் சென்னை என்று தனது திட்டவட்டமான ஆராய்ச்சி முடிவினை அறிவித்திருப்பது நமக்கெல்லாம் பெருமையாகும். ஹார்வர்டு பல்கலைக்கழக ஆய்வு குறிப்பிடுவது போல, இந்தியாவிலேயே முதலாவதாக மட்டுமல்ல; மனித சமுதாயத்தில் பாதி பேர் வாழ்கின்ற தாயகமான ஆசியா கண்டத்தின் நுழைவு வாயிலாகத் தமிழ்நாடு ஏன் ஆகக் கூடாது? ("Why can't Tamil Nadu become a regional gateway to Asia, home to half the humanity?"). இந்தியாவிலேயே திறமைசாலிகளின் மிகப் பெரிய உறைவிடம் (large reservoir of talent) என்றும், அறிவு செறிந்தோரின் இருப்பிடம் (intellectual power house) என்றும் பெயர் பெற்ற நமது தமிழகம் மேலும் உயர்ந்து உலகப் புகழ் பெற்றிட நமது அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

69. "சின்கா தமது பட்ஜெட் உரையில் குறிப்பிடத் தவறிவிட்டாலும்கூட தமிழ்நாடு முதல்வர் மு.கருணாநிதி அவர்கள் உச்சியில் ஏறிநின்று சென்னையில் நிகழ்ந்துவரும் அமைதியான புரட்சியைப் பற்றி உரக்கச் சொல்லிட வேண்டிய அவசியம் இல்லாமலேயே, ஓசையில்லாமல் ஏராளமான மென்பொருள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒரே நகரம் சென்னைதான்", என்று புகழ்பெற்ற கம்யூட்டர் வார இதழான "தி டி.க்யூ வீக்" தனது 6–3–2000 இதழில் பாராட்டியுள்ளது. **(What Sinha has apparently missed out is one city where lot more software action is taking place quietly without Tamil Nadu Chief Minister M.Karunanidhi having to shout from the rooftops about this silent revolution going on in Chennai) (The D.Q.Week 6-3-2000).**

70. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் தமிழ்நாடு மின்னணு நிறுவனமும் இணைந்து ரூ.338 கோடி செலவில், 12 இலட்சம் சதுர அடி பரப்பில் சென்னை தரமணியில் உருவாக்கி வரும் டைடல் (TIDEL) மென்பொருள் தொழிற் பூங்கா முடிவடையும் தருவாயில் உள்ளது. இங்கு செயல்படவிருக்கும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உலக அளவில் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்குத் தேவையான நவீன வசதிகளுடன் இந்த ஆண்டு மே மாத இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவிற்கு தயாராகி விடும். இந்தப் பூங்கா இந்தியாவிலேயே மிகவும் நூதன நவீன வசதிகள் கொண்ட (state-of-the-art) மென்பொருள் பூங்காவாக விளங்கும். உலக அளவில் புகழ்பெற்ற பல மென்பொருள் நிறுவனங்கள் இப்பூங்காவில் இடம் பெறும்.

71. தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த தொழில்களின் தேவைக்காக உருவாக்கப்பட்டுள்ள "தமிழ்நாடு மென்பொருள் வளர்ச்சி நிதி" (Tamil Nadu Software Development Fund) ஏப்ரல் 1999–லிருந்து செயல்படத் துவங்கியுள்ளது. தமிழகத்தில் மின்னணு மூலமாக வணிகம் வளர்ச்சியடைவதற்கு இந்நிதி பேருதவி புரியும்.

72. 'தமிழ்நெட் 99' என்ற சர்வதேச தமிழ் இணைய கருத்தரங்கு மாநாட்டின் பரிந்துரைகளின்படி, தரப்படுத்தப்பட்ட தமிழ் விசைப்பலகை மற்றும் தமிழ் எழுத்து வடிவக் குறியீடுகளை அரசு

அறிவித்துள்ளது. இத்தரங்களுக்கேற்பத் தயாரிக்கப்படும் வன்பொருள் மற்றும் மென்பொருளுக்குச் சான்று வழங்கும் முறைகளையும் அரசு அறிவித்துள்ளது.

73 அயல்நாடுகளுடன் இணையம் மூலம் தொடர்பு கொண்டு, தகவல் தொழில்நுட்பவியல் மூலம் மருத்துவம் மற்றும் சட்ட சேவைகள், அலுவல் சேவைகள் ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்ளும் முறை வேகமாகப் பரவி வருவதால், இது படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரித்திட வழிவகை செய்யும். கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திருநெல்வேலி போன்ற நகரங்களில் இத்தகைய சேவை நிறுவனங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்நகரங்களில் செயற்கைக் கோள் தரை நிலையங்கள் அல்லது இருப்பிட அமைப்புகளை அமைத்துத்தர இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (Software Technology Park of India) முன்வந்துள்ளது. இந்நிலையங்கள் வரும் நிதி ஆண்டில் செயல்படத் துவங்கும்.

74. இந்த அரசு 1998 ஆம் ஆண்டு ஹார்வர்டு பல்கலைக்கழகத்தோடு செய்து கொண்ட ஒப்பந்தப்படி அந்த நிறுவன ஆராய்ச்சியாளர்கள் அளித்துள்ள ஆய்வறிக்கையில், உலக அளவில் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு முன்னிலை பெறுவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையிலும், தகவல் தொழில் நுட்பத் தொழில் நிறுவனங்கள் அளிக்கும் கருத்துக்களின் அடிப்படையிலும், தகவல் தொழில் நுட்பத்தில் தமிழ்நாடு உலக அளவில் முன்னிலை பெறுவதற்கான ஒரு செயல் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

75. தகவல் தொழில் நுட்பத் துறையில் புதிய நிறுவனங்களைத் தொடங்கிட வருபவர்களுக்கு உதவிட தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) மற்ற நிதி நிறுவனங்களுடன் சேர்ந்து உருவாக்கிய ஊக்க மூலதன நிதி (Venture Capital Fund) வெற்றிகரமாக செயல்பட்டு ஐந்து தொழில் முனைவோருக்கு உதவி செய்துள்ளது. இதன் வெற்றியைக் கருத்தில் கொண்டு இந்த நிதியின் அளவை கணிசமாக அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## *கல்வி*

76. இந்த நிதியாண்டில் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.4426 கோடியிலிருந்து வரும் நிதியாண்டில் ரூ.4949 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

77. கடந்த இரண்டாண்டுகளில் தமிழ்நாட்டில் 712 தொடக்கப் பள்ளிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நம்முடைய மாநிலத்தின் எந்தவொரு பகுதியிலும் தொடக்கப் பள்ளி இல்லாத குக்கிராமங்களே இல்லை என்ற நிலையை நாம் சாதித்துள்ளோம்.

78. அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் தாய் மொழி அல்லது தமிழ் பயிற்று மொழியாக மாற்றுவதற்கு நீதியரசர் திரு. மோகன் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இது குறித்து உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு நிலுவையில் உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

**79. வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பவியல் துறையின் தேவைக்கு ஈடு கொடுக்கும் வகையில் மாணவர்கள் கணினி அறிவைப் பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டில் முதன் முதலாக அரசு மேல் நிலைப் பள்ளிகளில் பெரிய அளவில் கணினிக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்து வசதிகளுடன் 666 அரசு மேல் நிலைப் பள்ளிகளில் இந்த ஆண்டு துவங்கப்பட்ட இந்தத் திட்டம், வரும் ஆண்டில் எஞ்சியுள்ள அனைத்து அரசு மேல் நிலைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும்.**

80. வரும் நிதியாண்டில் அனைத்து அரசு கலை மற்றும் தொழிற்கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் கணினி அறிவைப் பெறுவதற்கு திட்டம் செயல்படுத்தப்படும்.

81. பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நீதிமன்றங்களின் தீர்ப்பினால் பட்டயம் பெற இயலாத நிலையில் உள்ள இந்த மாணவர்களுக்கு முறையான பயிற்சி அளிக்க, அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 30 விழுக்காடு இடங்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு வயது வரம்பு விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. எதிர் கட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு பரிந்துரைத்திருப்பது உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு மாறாக அமையும் என்பதால் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் அறிவுரையின்படி மறு ஆய்வு மனு ஒன்றை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்தின் (National Council for Teachers Education) நெறிமுறைகளுக்கு உட்பட்டு, வரும் ஆண்டில் இந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 30 விழுக்காட்டினை அதிகரிக்கும் கருத்துருவையும் அரசு ஆராய்ந்து வருகிறது.

## *இளைஞர் நலன்*

82. இளைஞர்களை ஆக்கப் பூர்வமான பணிகளில் ஈடுபடுத்திடவும், சிதறிக்கிடக்கும் அவர்கள் ஆற்றலைத் திரட்டிடவும் அவர்களை மன உறுதி படைத்தவர்களாகவும், எதிர்கால வாழ்வை நம்பிக்கையோடு எதிர்கொள்பவர்களாகவும் உருவாக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு "நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே" எனும் சங்ககாலப் பாடலை நினைவுகூரும் வகையில் இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுக்கென <u>தனித் துறையை நிறுவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.</u> இளைஞர்களிடையே அறிவியல் முனைப்பு, மத, சமூக நல்லிணக்கம், நல்லொழுக்கம் மற்றும் சமுதாய விழிப்புணர்வை மேம்படுத்தவும், அவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவும் திட்டங்கள் செயலாக்கப்படும்.

83. தற்பொழுது ஒரு சில பள்ளிகளில் மட்டும் தான் விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்கிற்கான வசதிகள் உள்ளன. நமது மக்கள் தொகையில் 35 சதவீதம் மாணவர்களல்லாத இளைய தலைமுறையினர், கிராமங்களிலும், பேரூராட்சிகளிலும் மேற்படி வசதிகளை பெற இயலாத நிலையில் உள்ளனர். இவர்களின் நேரம் மற்றும் சக்தியை ஒருமுகப்படுத்தவும், கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்டு, ஆரோக்கியத்துடனும், மத நல்லிணக்கத்துடனும், வாழ அனைத்து ஊராட்சிகளிலும், நகர்ப்புறங்களிலும் விளையாட்டு மையங்கள் உருவாக்கப்படும். விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க பள்ளிகளிலும், மாவட்ட அளவிலும், இறுதியில் மாநில அளவிலும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெறும் வீரர்களுக்கு பரிசுகளும் சுழற்கோப்பைகளும் அளிக்கப்படுகிறது. இதில் தனியார் துறையினரின் பங்கேற்பும் வரவேற்கப்படுகிறது.

84. கடந்த ஆண்டு நிதிநிலை விவாதத்திற்கு பதில் அளிக்கையில், இளைஞர் சுய வேலைவாய்ப்பு நிதி நிறுவனம் ஒன்று அமைப்பது குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை அளிக்க திரு. வெங்கிட்டரமணன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும் என்று கூறியிருந்தேன். அவ்வாறு அமைக்கப்பட்டு, அக்குழு இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு அளிப்பதற்காக தற்போது செயல்பாட்டில் உள்ள நிதி திட்டங்களைப் பற்றி ஆராய்ந்து வருகிறது. அந்த அறிக்கையை விரைவில் பெற்று அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## *தமிழ் ஆட்சி மொழி – பண்பாடு*

85. தமிழ் சங்கப் பலகை குறள் பீடம் முதலமைச்சரை தலைவராகவும், திரு. தமிழண்ணல் அவர்களை துணைத் தலைவராகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு முதல் கட்டமாக ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

86. 1996 ஆம் ஆண்டு தமிழக அரசின் ஒப்புதலோடும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரத்துடனும் தொடங்கப்பட்டு, பரதநாட்டியத்தில் தமிழகத்திலேயே பட்டப்படிப்புக்கான முதல்

நுண்கலைக் கல்லூரி என்ற பெருமையோடு, தனது கலைப் பணியை அருள்திரு எஸ்.எம். ஜார்ஜ் அவர்களை முதல்வராக கொண்டு தொடர்ந்து நடத்துகின்ற திருச்சிராப்பள்ளி "கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி" கலை நிகழ்ச்சிகளில் புதுமையைப் புகுத்தி, மனிதநேயம், மத நல்லிணக்கம், ஆகியவற்றைக் கருப் பொருளாக்கி வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் ஆயிரம் நிகழ்ச்சிகளுக்கு மேல் நடத்தியுள்ளது. இதன் பணிகளைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் வகையில் கலைக் காவிரி நிறுவனத்தை அரசு உதவி பெறும் நிறுவனமாக (Aided Institution) இந்த அரசு ஏற்று அதற்குரிய மானியத்தை வழங்கிடும்.

87. உலகெங்கிலும், தமிழ்க் கல்வி பெற ஆர்வமுள்ள மாணாக்கர்களின் பயனுக்காக டாக்டர் திரு. வ.செ. குழந்தைசாமி அவர்களை நிர்வாகக் குழுவின் தலைவராகக் கொண்ட 'தமிழ் இணையப் பல்கலைக் கழகம்' (Tamil Virtual University) ஒன்றினை ஏற்படுத்தி அரசு அறிவிக்கை செய்துள்ளது. ஆங்கிலம் தவிர வேறெந்த மொழிகளிலும் இணையம் (Internet) மூலம் கல்வியளிக்கும் இத்தகைய பயிற்சி அமைப்பு உலகில் வேறெங்கிலுமில்லாத ஒரு முன்னோடித் திட்டமாகும்.

88. பண்டைத் தமிழ் இலக்கியங்களை சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வண்ணம், எளிய முறையில் உரையெழுதியவரும், சுயமரியாதை இயக்கத்தின் பெரும் எழுத்தாளருமான, சீர்திருத்தச் செம்மல் சாமி.சிதம்பரனார் அவர்களது நூற்றாண்டு விழாவும், பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கி, பல்கலைக் கழகங்கள் போற்றும் ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்த தமிழறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்களது நூற்றாண்டு விழாவும், இந்த ஆண்டில் வருவதையொட்டி, அவர்கள் எழுதிய நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அதனடிப்படையில் தலா பத்து இலட்சம் ரூபாய் காப்பு நிதியாக வழங்கப்படும்.

89. அதைப் போலவே திராவிட இயக்க கவிஞர் மறைந்த முடியரசன் அவர்களது நூல்களையும் நாட்டுடைமையாக்கி அதனடிப்படையில் 10 இலட்சம் ரூபாய் காப்பு நிதியாக வழங்கப்படும்.

**90. மருதுபாண்டியர் நடத்திய சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக அவர்கள் தூக்கிலிடப்பட்ட இருநூறாவது ஆண்டினை நினைவு கூர்ந்திடும் வகையில், நினைவுச் சின்னம் அமைத்து 24–10–2001 அன்று புகழாஞ்சலி நிகழ்ச்சி நடத்துவதற்கான வழிமுறைகளை வகுத்திட ஏற்பாடுகள் செய்யப்படும்.**

## *மக்கள் நல்வாழ்வு–குடும்ப நலன்*

**91.** மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு வரும் நிதியாண்டில் ரூ.**1263** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**92.** கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வாழ்வொளித் திட்டத்தினை இந்த அரசு அறிமுகம் செய்தபோது அறிவித்திருந்தவாறு, அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் **1** முதல் **12** ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியரிடையே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, இதுவரை **59** இலட்சம் மாணவ மாணவியர்கட்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களுள் **29** இலட்சம் பேருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது.. மேலும் **66** ஆயிரம் மாணவ மாணவியர்கள் குறிப்பான நோய்களுக்கான சிறப்புச் சிகிச்சை பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

## *வருமுன்காப்போம்*

**93.** மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக மருத்துவர்கள் கிராமங்களை நாடிச் சென்று முகாம் இட்டு ஏழை எளியோர்க்கான பரிசோதனைகளும் சிகிச்சைகளும் செய்கிற வருமுன் காப்போம் திட்டத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்து வருகிறது. தொடங்கப்பட்ட நான்கு மாதங்களில் **21–3–2000** தேதி வரை **1634** முகாம்களில் **17.4** இலட்சம் பேர் பயன்பெற்றுள்ளனர். இதில் சுமார் **88** விழுக்காடு பயனாளிகள் கூலி வேலை செய்யும் ஏழை எளியோர்கள் என்றும், இதில் **40** விழுக்காடு பயனாளிகள் பெண்கள் என்றும், **26** விழுக்காடு சிறார்கள் என்றும், சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய அடித்தட்டு மக்களே இம்முகாம்களினால் பயனடைந்துள்ளனர் என்றும் இத்திட்டத்தினை ஆய்வு செய்ததில் தெரியவந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ ஒரு

கோடி மக்கள் பயன் பெறும் வகையில், தமிழ்நாடு முழுவதும் 10,000 முகாம்களை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக வரும் நிதி ஆண்டில் ரூ.10 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## *வாழ்ந்து காட்டுவோம்*

94. பெண்களை சமூக பொருளாதாரத் துறைகளில் அதிகாரம் பெற்றவர்களாக மாற்றுவதற்கு அவர்களை சுய உதவிக் குழுக்களாக அமைத்து, அவர்களுக்கேற்ற சுய வேலை வாய்ப்புப் பயிற்சியும், வசதிகளும் அளிக்கும் திட்டம் இந்த அரசால் 1989–90 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் மகளிர் அடைந்த பயன்களைக் கருத்தில் கொண்டு, 1997–98 ஆம் ஆண்டில் மகளிர் திட்டத்தை செயல்படுத்தி இந்த சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்த முனைந்துள்ளோம். தமிழ்நாடு மகளிர் திட்டம் தமிழகத்தில் சென்னைப் பெருநகரம் நீங்கலாக ஏனைய 28 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சுமார் 24000 சுய உதவி குழுக்களில் 4 இலட்சத்து 42 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மகளிர் உறுப்பினர்களாகச் சேர்ந்து, ரூபாய் 32 கோடிக்கும் அதிகமாக சேமித்துள்ளதோடு, இந்தக் குழுக்களுக்கு வங்கிகள் மூலமாக ரூபாய் 97 கோடிக்கும் மேல் கடன் உதவியும் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சேமிப்பு திட்டம், மகளிர் தம் அவசர அவசிய செலவுகளுக்காக தனியார் கடன் அளிப்பவர்களை நாடி அதிக வட்டியில் கடன் பெறும் இக்கட்டான நிலைமைக்கு ஆளாகாமல் பாதுகாக்கிறது.

95. ஏழை மகளிரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கும், சேமிக்கும் பழக்கத்தை அவர்களிடையே ஏற்படுத்துவதற்கும், மாநகராட்சிப் பகுதிகளில் சிறு வணிகத்தில் ஈடுபட்டுள்ள மகளிருக்கு 1–1–1999லிருந்து "சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறு வணிகத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2–5–1999 லிருந்து நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. 15–3–2000 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தின் கீழ் 62,923 மகளிர் பயனீட்டாளர்களுக்கு கூட்டுறவு வங்கிகள் ரூ.6 கோடியே 21 இலட்சம் அளவிற்குக் கடன் வழங்கியுள்ளன. இதில்

திருப்பிச் செலுத்தும் கடன் 95 விழுக்காடாக இருப்பது இத்திட்டத்தை ஊக்கப்படுத்துகிறது.

96. இந்த மகளிர் திட்டங்களையும் மற்றும் ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம், விதவைகள் மறுமணத் திட்டம், கலப்பு மணத் திட்டம் என்றுள்ள மகளிர் திட்டங்களையும், அவை தனித் தனி துறைகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்படினும் அனைத்தையும் ஒருங்கிணைத்து (Coordinate) முதலமைச்சர் செயலகத்தின் நேரடிக் கண்காணிப்பில் செயல்படுத்தப்படும். இந்த ஒருங்கிணைப்பு திட்டம் "வாழ்ந்து காட்டுவோம்" என்ற பெயரில் இயங்கும். இப்பெரும் திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் மொத்த ஒதுக்கீடு ரூ.120 கோடியாக இருக்கும்.

*சத்துணவு*

97. டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் 75 இலட்சம் சிறார்கள் பயன் அடைந்து வருகின்றனர். சத்துணவு திட்டங்களுக்கு, வரும் நிதியாண்டில் ரூ.581 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

98. சத்துணவு திட்டத்தின் கீழ் கறிகாய், விறகு, உப்பு ஆகியவற்றிற்கு வழங்கப்படும் மானியம் மாணவர் ஒருவருக்கு தினமொன்றுக்கு 18 பைசா என்றிருப்பதை இனி 23 பைசாவாக உயர்த்த அரசு முடிவு எடுத்துள்ளது. இதனால் அரசுக்கு வரும் நிதியாண்டில் ரூ.14 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

99. மாநிலத்தில் 71,138 சத்துணவு மையங்கள் உள்ளன. இம்மையங்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு வரும் நிதியாண்டில் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு இச்சத்துணவு மையங்கள் பழுதுபார்க்கப்பட்டு சீரமைக்கப்படும்.

*ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன்*

100. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நலனுக்காக வரும் நிதியாண்டில் ரூ. 626 கோடி ஒதுக்கப்படுகிறது.

101. பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 64 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 86 சமத்துவபுரங்களும் வரும் நிதியாண்டுக்குள் முடிக்கப்பட்டுவிடும்.

102. ஆதிதிராவிடர் பழங்குடி மாணவ, மாணவியர்களுக்காக 43 புதிய மாணவரில்லங்கள் ரூ.14 கோடி செலவில் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பழங்குடி மாணவர்களுக்கென 5 பள்ளிகளும், 9 மாணவரில்லங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

103. பிளாஸ்டிக் தொழில் நுட்பவியல், தோல் தொழில் நுட்பவியல், ஆடை அலங்கார தொழில் நுட்பவியல் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு வேலையை நோக்கமாகக் கொண்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சிறப்பு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் தாங்களே சொந்தமாக தொழில் அல்லது வியாபாரத்தைத் தொடங்க வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் இத் திட்டத்தின் கீழ் ரூ. 4 கோடியே 98 இலட்சம் மானியம் மற்றும் விளிம்புத் தொகையுடன் 1344 பேருக்கு உதவி அளிக்கப்பட்டது.

**104. 1998 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு சுமார் ரூபாய் நான்கு கோடி செலவில் கட்டப்படும் டாக்டர் அம்பேத்கர் மணிமண்டபப் பணி விரைவில் முடிவுற்று, வரும் ஏப்ரல் திங்களில் திறக்கப்படும்.**

**105. நமது மாநிலத்தில் சுமார் ஆறு இலட்சம் பழங்குடியினர் வாழ்கின்றனர். இதுவரை அவர்களின் மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்தும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்ககம் மூலம் செயல்படுத்தப்பட்டு வந்தன. பழங்குடியினர் நலனைக் காப்பதில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருப்பதாலும், அவர்களின் நலத்திட்டங்களை முனைப்பாக செயல்படுத்த வேண்டியும், பழங்குடியினர் நலனுக்கென ஒரு தனி இயக்ககம் (Directorate) உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.**

## *பிற்படுத்தப்பட்டோர் – மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்*

106. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் ஆகியோரின் நலனுக்காக வரும் நிதியாண்டில் ரூ.175 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

107. மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபைச் சேர்ந்த மாணவிகளை நடுநிலைப் பள்ளி வரை படிக்கச் செய்வதற்காக, 3ஆம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபு வகுப்பைச் சேர்ந்த 60,000 மாணவிகளுக்கு ஓராண்டிற்கு தலா ரூ.500 ஊக்க உதவி நிதி வழங்கும் சிறப்புத் திட்டம் நடப்பாண்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் ஆறாம் வகுப்பில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபு வகுப்பைச் சேர்ந்த 30,000 மாணவியருக்கு மாதமொன்றுக்கு தலா ரூ.100 வழங்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபு வகுப்பைச் சேர்ந்த பெண்களின் கல்வி நிலையில் மேலும் வரவேற்கத்தக்க பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

108. இம்மாநிலத்தில் வேலை வாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும் தொடர்ந்து 69 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, பயனுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

109. உருது பேசும் மக்களின் நீண்ட நாளைய கனவை நனவாக்கும் வண்ணம் இந்த அரசு தமிழ்நாட்டில் உருது அகாடமி என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. மாண்புமிகு கல்வி அமைச்சர் இதன் தலைவராகவும், டாக்டர் சையது சஃபியுல்லா துணைத் தலைவராகவும் இருப்பார்கள்.

110. சிறுபான்மையினருக்கு பொருளாதார உதவி அளிப்பதில் சிறப்பான கவனம் செலுத்தும் பொருட்டு, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார வளர்ச்சிக் கழகம் என்னும் தனி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கழகம், தேசிய சிறுபான்மையினர்

மேம்பாட்டுக்கழகத்திலிருந்து நிதியைப் பெற்று, நியாயமான வட்டி விகிதத்தில் சிறுபான்மையினருக்கு கடன் அளிக்கும்.

## *சமூகப்பாதுகாப்பு*

111. இருபது ஆண்டுகாலமாக அரசு புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி அனுபவித்து வருபவர்களுக்கு, அரசுக்கு அந்த நிலம் தேவையில்லாத பட்சத்தில், அந்த இடங்களுக்கான வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதற்குரிய வழிமுறைகள் வகுக்கப்படும் என ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்களது வேண்டுகோளுக்கிணங்க 20 ஆண்டு என்பது 10 ஆண்டாக குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான துறை அலுவலர் ஆகியோரைக் கொண்ட குழு பிரச்சனைக்குரிய இடங்களில் தல ஆய்வு செய்தபின், மாவட்ட ஆட்சியராலேயே தகுதியின் அடிப்படையில் வீட்டு மனைப் பட்டா அளிக்கப்படும். ! இதற்கான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

112. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் ஆதரவற்ற முதியோர், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்றோர் போன்ற பிரிவினருக்கு, வயதின் அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 150 என்பது வரும் நிதி ஆண்டு முதல் ரூபாய் 200 ஆக உயர்த்தி வழங்கப்படும். இந்த ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை வரம்பற்றது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

113. ஊனமுற்றோர் நலன்: கணினி பயிற்சியும், ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பயிற்சியும் அளிப்பதன்மூலம், கை கால் ஊனமுற்றோர்க்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன், சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 பயிற்சி மையங்கள் அமைத்து 300 பேருக்கு ஓர் ஆண்டு கணினிப் பயிற்சி இலவசமாக அளிக்கப்படும்; மேலும் 6 மையங்களில் ஆய்வுக்கூடப் பரிசோதனை, எக்ஸ்ரே பரிசோதனை, இ.சி.ஜி, ஈ.ஈ.ஜி. இதர நவீன

பரிசோதனைகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் பயிற்சி 300 பேருக்கு அளிக்கப்படும்.

114. சமூக சீர்திருத்தம்: புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள சமூக சீர்திருத்தத் துறை வாயிலாக மூடப் பழக்க வழக்கங்களிலிருந்து மக்களை மீட்கவும், பகுத்தறிவு, விஞ்ஞானம் ஆகியவற்றில் மக்களை ஈடுபடுத்திடும் பிரச்சாரங்களை சின்னத்திரை மூலமாகவும், துண்டுப் படங்கள் மூலமாகவும், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் மூலமாகவும் நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

## *நெசவாளர் நலன்*

115. நெசவுத் துறையில் நிலவி வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தை வழி சவால்களை சமாளிப்பதற்கும், உலகளவில் ஏற்றுமதியைப் பெருக்குவதற்கும் தகுந்த திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. சர்வதேச அளவில் தரமான ஏற்றுமதியில் ஈடுபடும் பொருட்டு 200 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 10,000 தறிகளில் முயற்சிகள் மேற்கொண்டு, சுமார் ரூ.25 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நெசவாளர் குடும்பங்களிலிருந்து மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்கள் தேசிய நாகரீக வடிவமைப்பு தொழில் நுட்ப கல்வி நிலையத்தின் (National Institute of Fashion Technology) சான்றிதழைப் பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

116. 60 வயதை அடையுமுன் இறக்க நேரிடும் கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, இந்த அரசு வழங்கத் தொடங்கிய காப்பீட்டுத் தொகை நடப்பு நிதியாண்டில் ரூ.35,000 லிருந்து ரூ.40,000 ஆக உயர்த்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, வரும் நிதி ஆண்டில் இந்தத் தொகை ரூ.50,000 ஆக உயர்த்தப்படுகிறது. 60 வயதை தாண்டிய நெசவாளர்கள் பயன் பெறும் வகையில் வழங்கப்படும் மாத ஓய்வூதியத் தொகை ரூ.150 என்பது ரூ.200 ஆக உயர்த்தப்படுகிறது.

117. நெசவாளர்களிடம் தேங்கிக் கிடக்கும் துணிகளுக்கு மார்க்கெட் கிடைப்பதற்கான வழிவகை காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## *தொழிலாளர் நலன்*

118. இந்த அரசு, அமைப்பு ரீதியில் அல்லாத தொழிலாளர்களின் நலனையும் பாதுகாப்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இந்த நோக்கத்தை எய்துவதற்காக, நல வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. இந்த வாரியத்தின் தொடக்கச் செலவுகளுக்காக ரூ.40 இலட்சத்தை மானியமாக அனுமதித்துள்ளது. இந்த வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள அமைப்பு ரீதியில் அல்லாத தொழிலாளர்கள் விபத்து நிவாரணம், மகப்பேறு நலன், பணி ஓய்வுக்காலப் பயன்கள் போன்ற உதவிகளைப் பெறுவதற்கு வகை செய்யப்படும். இந்த அமைப்பு ரீதியில் அல்லாத தொழிலாளர் நல வாரியத்தில் சேர்க்கப்பட்டுள்ள தையல் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, இந்த தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்று, இந்த பிரிவினர்களுக்காக தனித்தனி நல வாரியங்களை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

119. நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்து வருகிறார்கள். இவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த கோலப்பன் குழுவின் பரிந்துரைக்கேற்ப விவசாயத் தொழிலாளர் நல வாரியம் ஒன்று வரும் நிதியாண்டில் உருவாக்கப்பட்டு செயல்படும்.

120. மூடப்பட்டுள்ள தொழிற்சாலைப் பிரிவுகளில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.250/– உதவித் தொகை அளிப்பதற்கான திட்டம், 1999 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இதுவரையில், 6,166 தொழிலாளர்களுக்கு இவ்வுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் வருகிற விண்ணப்பங்களை ஆராய்ந்து மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படும்.

## *பத்திரிக்கையாளர் நலன்*

121. 1996–97 ஆம் ஆண்டு பத்திரிக்கையாளர் ஓய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ.500 லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தப்பட்டது. பின், கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அவர்களது ஓய்வூதியம் ரூ.1500 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது அவர்களது கோரிக்கையை ஏற்று அவர்கள் ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.2000 ஆக உயர்த்தி வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும், பணிபுரியும்போது பத்திரிக்கையாளர்கள் இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் தொகை ரூ.40,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி இனி வழங்கப்படும்.

## *வீட்டு வசதி*

122. மாநகராட்சிப் பகுதிகளில் ஆட்சேபணை இல்லாத இடங்களில் வாழ்கிற 50,000 குடும்பங்களுக்கு தரமான, தீ பற்றாத கல்நார் தகடுகளாலான கூரை, சுவர் மற்றும் கதவுடன் கூடிய வீடுகள் கட்டப்படும் என்று சென்ற ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அறிவித்திருந்தேன். **அதன்படி ரூ.15 கோடி செலவில் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு இத்தகைய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்பட்டு, ரூ.39 கோடி மதிப்பீட்டில், 26 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.**

123. மாவட்டத் தலைமையிடங்களில் அரசு அலுவலர்களுக்கு வீட்டுவசதி அளிப்பதற்காக, கரூர், நாகப்பட்டிணம், திருவாரூர், தேனி, திருவள்ளூர், நாமக்கல், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 2144 வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

124. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைமை இடங்களிலும், வேகமாக வளர்ந்து வரும் திருப்பூர் போன்ற நகர்களிலும் ஏற்பட்டுவரும் குடியிருப்புப் பிரச்சினையைச் சமாளிக்க, இந்நகரங்களுக்கு அருகில் நிலம் கையகப்படுத்தப்பட்டு புதிதாக சார்பு

நகரங்கள் (Satellite Towns) உருவாக்கப்படும். இந்நகரங்களில் தேவையான குடிதண்ணீர் வசதி, சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு, வரையறுக்கப்பட்ட வடிவமைப்பு மனைகள் பொது மக்களுக்கு விற்கப்படும். அவர்கள் இம்மனைகளிலே வீடு கட்டிக் கொள்ள ஹட்கோ போன்ற நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெற உதவி செய்யப்படும்.

## *இந்து சமய அறநிலைய நிருவாகம்*

125. இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான ஏராளமான நிலங்கள் கடந்த ஆண்டில் மீட்கப்பட்டுள்ளன. உதாரணமாக, திருத்துறைப்பூண்டியில் 621 ஏக்கர், பேரூரில் 250 ஏக்கர், ஆளவந்தார் அறக்கட்டளையில் ரூ.300 கோடி பெறுமான சொத்துக்கள், திருவட்டீசுவரன் கோயிலில் ரூ.100 கோடி பெறுமான சொத்துக்கள் என்று தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் மீட்கப்பட்டுள்ளது. 1–7–1999 முதல் வருவாய் நீதிமன்றங்கள் கோயில்களுக்குச் சாதகமாக 13,500 வழக்குகளை முடித்து, அதன்வாயிலாக பல இலட்சக்கணக்கான ரூபாய் கோயில்களுக்கு வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

## *தென்மாவட்டங்களின் வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்கள்*

126. தென்மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக்கான திட்டங்களை வகுத்தளித்திட நீதியரசர் திரு. இரத்தினவேல் பாண்டியன் அவர்களைத் தலைவராகவும், திரு ஆர்.ஏ.சீத்தாராமதாஸ் அவர்களை துணைத் தலைவராகவும், திரு ஏ.வெங்கட்டராமன் அவர்களை உறுப்பினராகவும் கொண்டு அமைக்கப்பட்ட குழு தனது இடைக்கால அறிக்கையை சென்ற மாதம் 28ம் தேதி அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கையின் பரிந்துரைகளையொட்டி பின்வரும் திட்டங்கள் வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

- இராமநாதபுரம், விருதுநகர், மற்றும் தேனி மாவட்டங்களில் புதிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள்.

- நபார்டு உதவியோடு குளங்கள் மற்றும் கண்மாய்கள் புனரமைப்புத் திட்டம்; ஒவ்வாரு கண்மாய்க்கும் பயன்படுத்துவோர் குழு அமைத்து அவற்றின் மூலம் கண்மாய்களைப் பராமரித்தல்.

- தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியை மேம்படுத்த சிறப்புத் திட்டம்.

- தென்மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பவியல் வசதிகளை உருவாக்கி அதன் மூலம் வேலைவாய்ப்பு வசதிகளை பெருக்குதல், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (Software Technology Park of India) மூலமாக சர்வதேச இணைப்புகளை ஏற்படுத்துதல்.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக இரப்பர் மற்றும் இரப்பர் மர அடிப்படையிலான பொருட்களை உற்பத்தி செய்ய ரூ.14 கோடி முதலீட்டில் இரப்பர் தொழிற்பூங்கா ஏற்படுத்துதல்.

- ஏற்கெனவே குறிப்பிட்டவாறு நாங்குநேரியில் 2000 ஏக்கர் பரப்பில் ஹை–டெக் தொழில்நுட்பப் பூங்கா.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குளச்சல் துறைமுகத்தினை மேம்பாடு செய்வது தொடர்பாக பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கையை சுமார் ரூ.4.6 கோடி செலவில் மலேசிய அரசு தயாரித்து வருகிறது. இன்னும் சில மாதங்களில் ஆய்வு அறிக்கை பெற்றபின் குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்துவது பற்றி அரசு முடிவு எடுக்கும்.

127. திருநெல்வேலி மாவட்டம் அபிஷேகப்பட்டியில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையை மேம்படுத்தி தென்மாவட்டங்களில்

**உள்ள கால்நடைகளின் தரத்தினை உயர்த்த ஆவன செய்யப்படும். குறிப்பாக, தென் மாவட்டங்களுக்கு ஆடுகள் வளர்ப்பு மையம் ஒன்றை ஏற்படுத்துதல், அதிகப் பயன் தரும் கோழியினங்களை கோழி வளர்ப்போர்க்கு அளிக்க மையம் ஒன்றை ஏற்படுத்துதல், நீல நாக்கு நோய் போன்ற கால்நடை நோய்களை சமாளிக்க விவசாயிகளுக்கு உதவும் வகையில் வட்டார ஆய்வுக்கூடம் ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கு இந்த கால்நடைப் பண்ணையில் முக்கியத்துவம் அளிக்கப்படும்.**

## *மதுரை மாநகரில் உயர்நீதிமன்றக் கிளை*

**128.** கடந்த பல ஆண்டுகளாக மதுரை மாநகரில் சென்னை உயர்நீதிமன்றக் கிளை ஒன்றை அமைக்க நாம் எடுத்த முயற்சி கனிந்துள்ளது; தமிழக நீதி பரிபாலன வரலாற்றில் ஒரு மைல் கல்லாகத் திகழும் இதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு, புதிய நீதிமன்றக் கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா வரும் ஏப்ரல் திங்கள் **13** ஆம் நாளன்று நடைபெற உள்ளது. இதன் வாயிலாக தென்மாவட்ட மக்கள் நீதியைப் பெறுவது எளிமையாக்கப்படுகிறது.

## *அரசுப் பணியாளர், ஆசிரியர், ஒய்வூதியதாரர் நலன்*

**129.** அரசு அலுவலர், ஆசிரியர், ஒய்வூதியதாரர் ஆகியோரின் நலனைக் கருதி இந்த அரசு, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கடும் நிதி இடர்ப்பாடு இருந்த போதிலும், அவர்களுக்கு கூடுதல் அகவிலைப்படி வழங்கியதால் ஏற்பட்ட ரூ.**750** கோடி கூடுதல் செலவையும், பொங்கல் ஊதியக் கொடை வழங்கியதனால் ஏற்பட்ட ரூ.**210** கோடி கூடுதல் செலவையும் ஏற்று அவர்களின் மனம் கோணாமல் பார்த்துக் கொள்கிறது.

**130.** அரசு அலுவலர்களுக்கு வீடுகட்ட தற்போது ரூபாய் **4** இலட்சம் வரை முன்பணம் வழங்கப்படுகிறது. இத்தொகையை உயர்த்தி வழங்கவேண்டுமென்ற அரசு அலுவலர்களின் கோரிக்கையை ஏற்று வரும் நிதியாண்டிலிருந்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இந்த

முன்பணத்தின் உச்சவரம்பு ரூபாய் 6 இலட்சமாக உயர்த்தப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.100 கோடியாக அதிகரிக்கப்படும்.

**131.** மாநில அரசின் ஓய்வூதியச் செலவு கடந்த ஆண்டு ரூபாய் 1691 கோடியிலிருந்து நடப்பு நிதியாண்டில் ரூபாய் 2517 கோடியாக உயர்ந்துள்ளது. ஓய்வூதியச் செலவினம் அரசு செலவினங்களில் மிக வேகமாக அதிகரித்து வருகின்ற ஓர் இனமாக இருக்கிறது. கடந்த ஆண்டு நான் அறிவித்தவாறு, ஓய்வூதியர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையில் மீதமுள்ள 40 விழுக்காடு வரும் நிதி ஆண்டில் ரொக்கமாக வழங்கப்படும்.

## *ஆண்டுத் திட்டம்*

**132.** தமிழ்நாடு தொடர்ந்து ஒவ்வோராண்டும் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை முழுவதுமாக எய்தி வந்துள்ளது. நடப்பு நிதியாண்டில், நிதி ஆதார இடர்ப்பாடு இருந்தபோதிலும், ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.5250 கோடி முழுமையாக எய்தப்படும். வரும் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவரோடு நான் கலந்துரையாடிய பின் முடிவு செய்யப்படும். அதை எதிர்நோக்கி அந்த ஒதுக்கீட்டின் அளவு ரூ.5700 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## *நிதி நிலைமை*

**133.** நடப்பு ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை 1999 மார்ச் திங்களில் அவையில் வைத்த போது, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.15,867.78 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.18,500.32 கோடியாகவும் இருந்தன. இவ்வாண்டிற்கான திருத்த மதிப்பீட்டில், வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.16,465.29 கோடியாகவும் வருவாய்க் கணக்கில் செலவு ரூ.20,166.02 கோடியாகவும் அதிகரித்துள்ளன.

**134.** 1999–2000 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், மொத்தப் பற்றாக்குறை ரூ.790.13 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டது.

ஆனால், திருத்த மதிப்பீட்டில் அப்பற்றாக்குறை ரூ.159.90 கோடியாகக் குறைந்துள்ளது.

135. 2000–2001 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.18,406.17 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.21,564.87 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

136. 2000–2001 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அனைத்துக் கணக்குகளிலும் நிகரப் பற்றாக்குறை ரூ.667.96 கோடியாக அதிகரித்துள்ளது. இப்பற்றாக்குறையைக் குறைக்க முனைப்பான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## *வணிக வரிகள்*

137. இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்குமுன்பு, சென்ற ஆண்டு போல மாநிலத்திலுள்ள வர்த்தக சங்கங்கள், வணிகர் சங்கங்கள் மற்றும் தொழில் முனைவோர் சங்கங்களின் உறுப்பினர்களை அழைத்து, அவர்களுடைய கருத்தினைக் கேட்டுப் பெற்றேன். அவற்றைப் பரிசீலித்து பின் வரும் வரி மாற்றங்களை அறிவிக்கின்றேன்.

- மொசைக் கற்கள், செராமிக் சுவர் மற்றும் தள ஓடுகள் மற்றும் பளிங்குக் கற்கள் ஆகியவற்றிற்கு விற்பனை வரி 20 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.
- தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்ட முதலாம் அட்டவணை பிரிவு E வரிசை எண் 3ல் உள்ள செராமிக் துப்புரவுக் கலன்கள், வரிசை எண் 5 ல் உள்ள இஸ்திரிப் பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் போன்ற வீடு மற்றும் வணிகத்திற்குரிய மின் சாதனங்கள் மற்றும் வரிசை எண் 7 ல் உள்ள அனைத்துவகை மின் சக்திக் கருவிகள், உபகரணங்கள், சாதனங்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- முதலாம் அட்டவணை பிரிவு E வரிசை எண் 6 ல் உள்ள அனைத்து வகை மின்சக்தி பொருட்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.
- உருளைகள் (bearings) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.
- மின்னணு பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளின் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

மேற்கண்ட பொருட்களின் வரிவிகிதங்கள் அண்டை மாநிலங்களை விட அதிகமாக இருப்பதால் வணிகம் அண்டை மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு வரி குறைப்பு செய்யப்படுகிறது. இதனால் வரி இழப்பு ஏற்படாது என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஏற்படும் வருவாய் மாற்றங்கள் ஆறு மாத காலத்திற்குப் பின் ஆய்வு செய்யப்பட்டு, மேற்கண்ட பொருட்களில் வரி இழப்பு ஏற்படுமாயின், இவற்றில் தக்க மாற்றம் செய்யப்படும்.

- நித்தியகல்யாணி இலை மற்றும் வேர், அடிசரக்கு இனங்கள், காது கேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி (cord), அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை மற்றும் கற்கண்டு, வணிகச் சின்னமில்லாத மசாலாப்பொடி, வணிகச் சின்னமில்லாத காய்கறி வத்தல்கள், தமிழ் தினசரி காலண்டர்கள், காகித உறைகள் மற்றும் பைகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி அறவே நீக்கப்படுகிறது.

- அனைத்து கண்ணாடி மற்றும் கண்ணாடி கலன்கள், உலோகப் பூச்சுகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட கண்ணாடி சீசாக்கள் மீதான கொள்முதல் வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- பேஜர்கள், செராமிக் கற்கள் (ceramic bricks) மற்றும் வெளுப்புத் திரவத்தின் (bleach liquid) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- வறுகடலையின் மீதான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- மின்வாரியம், நெய்வேலி லிக்னைட் கார்பரேசன் போன்ற மின் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும் டிரான்ஸ்பார்மர் எண்ணெய் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- ஒரு லிட்டர் அதிகபட்ச சில்லறை விலை (Maximum Retail Price) ரூ. 29–ம் அதற்கு மேலும் உள்ள மென் பானங்களுக்கான விற்பனை வரி 12 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக உயர்த்தப்படுகிறது.

மேற்கண்ட வரி விலக்குகள் மற்றும் வரி மாற்றங்கள் 1.4.2000–முதல் அமலுக்கு வரும்.

- பரிசுச் சீட்டு விற்பனை மீதான இணக்கவரி செலுத்த வணிகர்களுக்கு இருந்த விருப்பத்தேர்வு ரத்து செய்யப்பட்டு அனைத்து லாட்டரிச் சீட்டு வணிகர்களும் இணக்க முறையிலேயே வரி செலுத்த வகை

செய்யப்படுகிறது. இணக்க வரி வீதங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்படுகின்றன:–

| | தற்போதைய வரி | மாற்றியமைக்கப்பட்ட வரி |
|---|---|---|
| வாராந்திர குலுக்கல் | ரூ.10,000 | ரூ.20,000 |
| மாதமிரு முறை குலுக்கல் | ரூ 15,000/– | ரூ 25,000/– |
| மாதாந்திர குலுக்கல் | ரூ. 25,000/– | ரூ. 40,000/– |
| மாதாந்திர சிறப்பு குலுக்கல் | ரூ. 40,000/– | ரூ. 60,000/– |
| விழாக்கால சிறப்பு குலுக்கல் | ரூ. 60,000/– | ரூ. 1,00,000/– |

- அறை வாடகை தினம் ரூ.200–க்கு மேல் உள்ள தங்கும் விடுதிகள் மீதான 20 விழுக்காடு ஆடம்பர வரி பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| (அ) | ரூ. 200–ம் அதற்கு மேலும், ஆனால் ரூ. 499–வரை அறை வாடகை இருப்பின் | 15 விழுக்காடு |
| (ஆ) | ரூ. 500–ம் அதற்கு மேலும், ஆனால் ரூ. 999–வரை அறை வாடகை இருப்பின் | 20 விழுக்காடு (மாற்றமில்லை) |
| (இ) | ரூ. 1000–ம் மற்றும் அதற்கு மேல் அறை வாடகை இருப்பின் | 25 விழுக்காடு |

- கேபிள் டி.வி. மீது விதிக்கப்பட்ட கேளிக்கை வரி வசூலை அதிகரிக்கவும், உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் நிதி ஆதாரம் ஒன்றை அளிக்கவும், தற்போது கேபிள் டி.வி. நடத்துபவர்கள் மீது தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் கேளிக்கை வரி விகிதத்திற்கு மிகாமல்,

உள்ளாட்சி அமைப்புகள் தாங்களே கேளிக்கை வரி விதித்து வசூல் செய்துகொள்ள அனுமதியளிக்கப்படும்.

- தற்போது கேளிக்கை வரிச்சட்டப் பிரிவு 4–ன் கீழ் வசூலின் அடிப்படையில் வரி செலுத்தும் மாநகராட்சிப்பகுதி திரையரங்குதாரர்கள், விருப்பப்படின் இணக்க வரி செலுத்த வகை செய்யப்படுகிறது. அவர்கள் மொத்த இருக்கைகளின் மீதான மொத்த வசூல் தொகையில் (Gross Collection Capacity) 22 விழுக்காடு 25 காட்சிகளுக்கென கணக்கிட்டு இணக்க வரி வாரந்தோறும் செலுத்தலாம். சிறப்புத்தகுதி நகராட்சிப் பகுதி திரையரங்குதாரர்கள், மொத்த இருக்கைகளின் மீதான மொத்த வசூல் தொகையில் 21 விழுக்காடு 25 காட்சிகளுக்கு என கணக்கிட்டு வாரந்தோறும் செலுத்தலாம்.

- கேளிக்கை வரிச் சட்டப்பிரிவு 4–ன் கீழ் வரி செலுத்தும் திரையரங்குதாரர்கள் புதிய திரைப்படங்களின் மீது செலுத்தும் கேளிக்கை வரி 30 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- திரைப்படங்கள் குத்தகை மீதான விற்பனை வரி அறவே நீக்கப்படுகிறது.

- ரூபாய் மூன்று இலட்சத்துக்கு மேல், ஆனால் ரூபாய் பத்து இலட்சத்திற்குக் குறைவாக விற்பனைத்தொகை உள்ள வணிகர்கள், முதல் மூன்று இலட்சம் வரை உள்ள விற்பனை மீது வரி வசூல் செய்திராவிடில், அத்தொகையின் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரி ரத்து செய்யப்படுகிறது.

**138.** வணிகர்களுக்கு இருக்கும் நடைமுறை சிரமங்களை கருத்தில் கொண்டு பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

- வணிகர்கள் பதிவு சான்று பெற விண்ணப்பித்தால் ஒரு வார காலத்திற்குள் சான்று வழங்க வழி செய்யப்பட்டுள்ளது.
- பிணை வைப்புத்தொகையும் ஒரே அளவாக அனைத்து வணிகர்களுக்கும் நிர்ணயிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- வணிக உரிமங்களை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கத் தகுதியுள்ள அனைத்து வணிகர்களுக்கும் 5 ஆண்டுகளுக்கு புதுப்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.
- வணிகர்களுக்குத் தேவையான சில படிவங்களை வணிக வரித்துறை அலுவலகத்தில் பெறுவதில் உள்ள தாமதங்களைத் தவிர்க்க வணிகர்கள் தாங்களே அச்சடித்த படிவங்களை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

**139.** சுயவரி விதிப்புக்குத் தற்போதுள்ள உச்சவரம்பான ரூபாய் 20 இலட்சம், ரூபாய் 1 கோடியாக அதிகரிக்கப்பட்டு, இத்தொகைவரை மொத்த விற்பனை செய்யும் வணிகர்கள் அனைவருக்கும் பதிவு பெற்ற பட்டயக் கணக்கர் (chartered accountant) தணிக்கைச் சான்றிதழின் அடிப்படையில் வரிக் கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரி விதிப்பு ஆணை பிறப்பிக்கப்படும். இதில் கணிப்பொறி மூலம் தேர்வு செய்யப்பட்ட 20 விழுக்காடு கணக்குகள் மட்டும் துறையினரால் ஆய்வு செய்யப்படும்.

## நிதி மேலாண்மை

**140.** சிறுசேமிப்பு வசூலின் அடிப்படையில் மத்திய அரசு வழங்குகின்ற நீண்ட காலக் கடன் மாநிலத்தின் முக்கியமான கூடுதல் நிதி ஆதாரங்களில் ஒன்றாகும். சென்ற நிதியாண்டில் ரூ.779 கோடியாக இருந்த இக்கடன் நடப்பு நிதியாண்டில் ரூ.1014 கோடியாக உயர்ந்துள்ளது. சிறுசேமிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள சிறுசேமிப்பு இயக்ககம், சேமிப்பு முனைவர்கள் மற்றும் பிற அமைப்புகளின் பணி மேம்படுத்தப்பட்டு, நமது மாநிலத்தில் சிறு சேமிப்பு வசூல் மேலும் அதிகரிக்கப்படும்.

**141.** நமது மாநிலத்திலிருந்து வெளிநாட்டிற்கு சந்தன மரக்கட்டைகளை ஏற்றுமதி செய்ய மத்திய அரசின் அனுமதி பெறப்பட்ட போதிலும் இவைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து போதிய கேட்பு இல்லாததால் ஏற்றுமதி இதுவரை செய்யப்படவில்லை. ஆயினும், முறையாக இரண்டு மாதத்திற்கு ஒரு முறை சந்தன மரம் ஏலம் விடப்பட்டதின் மூலம் சென்ற நிதியாண்டில் கிடைத்த வருவாய் ரூ.27 கோடிக்கு மாறாக நடப்பு நிதியாண்டில் ரூ.70 கோடியாக உயர்ந்துள்ளது. வரும் நிதியாண்டிலும் இதன் மூலம் இத்தகையான கூடுதல் வருவாய் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**142.** 1990–ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட பழுப்பு நிலக்கரிக்கான உரியத் தொகையை (Royalty) உயர்த்த வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசிடம் கடந்த ஓராண்டுக்கு மேலாக வலியுறுத்தி வருகிறது. இருப்பினும், இது குறித்து யாதொரு முடிவும் மத்திய அரசால் இதுவரை எடுக்கப்படவில்லை. மத்திய அரசு நம் கோரிக்கையை ஏற்று விரைவில் முடிவெடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

**143.** கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் நான் அறிவித்தவாறு, தற்போது அரசின் பல்வேறு துறைகள் செயல்படுத்தி வரும் திட்டங்களை மாநில திட்டக் குழு ஆய்வு செய்து பரிந்துரைகளை அளித்துள்ளது. இந்தப் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, இவற்றின் மீது அடுத்த 3 மாதங்களில் அனைத்து துறைகளாலும் முடிவு எடுக்கப்படும்.

144. அரசு நிறுவனங்கள் வெளிச் சந்தையிலிருந்தும், நிதி நிறுவனங்களிலிருந்தும் பெறும் கடன்களுக்கு அரசு உத்தரவாதம் அளித்து வருகிறது. 31–3–1999 நிலவரப்படி ரூ.6180 கோடி நிலுவையாக உள்ள கடன்களுக்கு நம்மாநிலத்தில் அரசு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய உத்தரவாதங்கள் மாநில அரசின் நிதிநிலையைப் பாதிக்கும் சாத்தியக்கூறு இருப்பதால், இந்திய ரிசர்வ் வங்கி நியமித்த வல்லுநர் குழு அளித்துள்ள பரிந்துரைகளை ஏற்று இத்தகைய உத்தரவாதங்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 293(1)–ன் கீழ் இந்தக் கூட்டத் தொடரில் தீர்மானம் இயற்றக் கருதப்பட்டுள்ளது.

145. மாநில அரசு தற்போது செயல்படுத்தி வரும் பல்வேறு மானியத் திட்டங்களின் பயன்கள் அத்திட்டங்களின் கீழ் தகுதிவாய்ந்தவர்களுக்கே சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் திட்டங்களின் செயலாக்கம் சீரமைக்கப்படும்.

146. உத்தேசிக்கப்பட்டுள்ள வரி மாற்றங்களின் விளைவுகளை கணக்கில் கொண்டபின் வரவு–செலவு இறுதி பற்றாக்குறை ரூ.665 கோடியாக இருக்கும். நிலுவை வசூலை அதிகரித்தல் மற்றும் சிக்கன நடவடிக்கைகள் மூலம் இப்பற்றாக்குறையை ஈடு செய்ய கருதப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆளும் கட்சிக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்துவதுதான் அரசு. அதுபோல, அனைவரையும் சேர்த்து நடத்துவதுதான் நல்லரசு. எனவே, இம்மன்றத்தின் அகத்தும் புறத்தும் கூறப்படும் ஆக்கம் நிறைந்த நல்ல கருத்துக்களையும், அறத்தை அணிசெய்யும் ஆலோசனைகளையும் இவ்வரசு வரவேற்று, அவற்றைக் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து ஆவன செய்ய முற்படும் என்றும் உறுதி கூறுகிறேன்"

– என்று 25.3.1971 அன்று, முதலமைச்சராக முதல் இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தை அளித்து உரையாற்றிய போது நான் குறிப்பிட்டதை, இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்; அதே உறுதியை இப்பொழுதும் வழங்குகிறேன். இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்படுவதற்கு என்னுடன் ஒத்துழைத்து இடையறாது அரும்பணியாற்றிய நிதித்துறைச் செயலாளர் திரு. பி.வி.ராஜாராமன், இ.ஆ.ப. அவர்களுக்கும் அரசின் அதிகாரிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைக் குவிக்கிறேன்.

வணக்கம்

**மு.கருணாநிதி,**
**முதலமைச்சர்.**

சென்னை
2000 ஆம் ஆண்டு
மார்ச் திங்கள் 24 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2031,
பங்குனி திங்கள் 11 ஆம் நாள்.